நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for young friends of fmpb

FRIENDS MISSIONARY PRAYER BAND

இளைஞர் மாத இதழ்

# பாடுகளின் களத்தில் மகிழ்ச்சி காண்போம்!

களத்தில் 2026 வீரியம்

Vol 43 - Issue 10 - October - 2026



Private circulation only

REV. SELVINRAJ G CHARLES

# ஜீவனுள்ள புதுவழி

எபிரெயர் நிருபம் 10ஆம் அதிகாரம், கிறிஸ்து இயேசுவின் சிலுவை பலியினால் நமக்குக் கிடைத்துள்ள புதிய உடன்படிக்கையையும், அதன் மூலம் நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைவதற்குப் பெற்றுக்கொண்ட பாக்கியத்தையும் மிகத் தெளிவாக விளக்குகிறது. இது வெறும் கட்டிடத்திலிருந்து துதிக்கிற அனுபவம் மட்டுமல்ல; இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் திறக்கப்பட்ட ஜீவனுள்ள புது வழியும், நமது விசுவாசத்தின் வெளிப்பாடுமாகும்.

**துதிக்களத்தின் அடிப்படை - இயேசுவின் ஒரே தடவையான பலி (எபி. 10:1-14):**

பழைய உடன்படிக்கையின் கீழ் ஆசாரியர்கள் நாள்தோறும், ஆண்டுதோறும் மிருகங்களின் இரத்தத்தைச் சிந்தி பலிகளைச் செலுத்திவந்தனர். ஆனால் அந்தப் பலிகளால் பாவங்களை முழுமையாக நிவர்த்தி செய்ய முடியவில்லை.

- **பழைய துதிக்களம்:** பயமும், குற்ற உணர்வும், திரும்பத் திரும்பச் செய்யப்படும் பலிகளும் நிறைந்ததாக இருந்தது.
- **புதிய துதிக்களம்:** இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரப் பலியினாலே நம்மை என்றென்றைக்கும் பரிசுத்தமாக்கினார் (எபி. 10:10). எனவே நமது துதிக்களத்திற்கு முதன்மையான அடித்தளம் இயேசு சிலுவையில் செய்து முடித்த தியாகபலியாகும்.

**துதிக்க:**

- ஆண்டவரே, மிருகங்களின் இரத்தத்தினால் அல்ல; உம்முடைய சொந்தப் பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி ஒரே பலியினாலே எங்களை என்றென்றைக்கும் பரிசுத்தமாக்கிய உம் மேலான அன்பிற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்.
- குற்ற உணர்வை நீக்கி எங்களை நித்தியமாய் மீட்டுக்கொண்ட இயேசுவே உமக்குக் கோடி ஸ்தோத்திரங்கள்!

**துதிக்களத்தின் வாசல் - தைரியத்தை உண்டாக்கிய ஜீவனுள்ள வழி (எபி. 10:19-22):**

இயேசுவின் மரணத்தின் போது தேவாலயத்தின் திரைச்சீலைக் கிழிந்தது. இதன்மூலம் மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிய ஜீவனுள்ள வழியை நமக்கு உண்டுபண்ணினார். இப்போது நாம் பயத்தோடு அல்ல; பிதாவாகிய தேவனை “அப்பா, பிதாவே” என்று அன்போடு துதிக்கும் தைரியமான துதிக்களத்தை அடைந்திருக்கிறோம்.

**துதிக்க:**

- எங்கள் பரம பிதாவே, திரைச்சீலையைக் கிழித்து, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நாங்கள் பயமின்றி தைரியமாய் நுழையும் பாக்கியத்தைத் தந்ததற்காக உமக்கு நன்றி.
- தெளிக்கப்பட்ட மனசாட்சியோடும், தூய்மையாக்கப்பட்ட இருதயத்தோடும் உம் பிரசன்னத்தில் ஆராதிக்கும் பாக்கியம் தந்த எங்கள் மீட்பரே உம்மைப் போற்றித் துதிக்கிறோம்.

**துதிக் களத்தின் கடமைகள் - விசுவாசமும், நற்கிரியைகளும் (எபி. 10:23):**

ஒரு உண்மையான துதி என்பது தனிப்பட்ட ஆராதனையோடு நின்று விடுவதில்லை, அது விசுவாசிகளின் கூட்டுறவிலும் வெளிப்படுகிறது.

**துதிக்க:**

- வாக்குத்தத்தங்களில் உண்மையுள்ளவரே உம்மைத் துதிக்கிறோம்!
- விசுவாசிகளோடு இணைந்து உம்மைத் தொழுதுகொள்ளவும், ஒருவரையொருவர் அன்பிலும், நற்கிரியைகளிலும் உற்சாகப்படுத்தவும் நீர் தந்த திருச்சபைக்காக ஸ்தோத்திரம்.
- வருகையின் நாட்களுக்கு எங்களை ஆயத்தப்படுத்தும் எங்கள் நம்பிக்கையின் தேவனே உம்மைப் போற்றுகிறோம்.

**துதிக் களத்தைப் பாதுகாத்தல் - பின்வாங்குதலுக்கு எச்சரிக்கை (எபி.: 10:26-39):**

துதிக்களத்தை அடைந்த ஒரு விசுவாசி தேவனுடைய கிருபையை அலட்சியம் செய்யக்கூடாது.

- சத்தியத்தை அறிந்த பின் மனப்பூர்வமாகப் பாவம் செய்தால், இனி பாவங்களினிமித்தம் செலுத்தப்படும் பலி வேறொன்றிராது.
- நாம் சோர்ந்து போகாமல் துதியின் களத்தில் நிலைத்து நிற்க வேண்டும்.
- “என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் பிழைப்பான். பின்வாங்கிப் போவானானால் என் ஆத்துமா அவனில் பிரியமாயிராது” (எபி. 10:38)

நாம் இந்த துதிக்களத்தைப் பெற்றுக்கொண்டதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தி விசுவாசத்தில் நிலைத்திருந்து, கர்த்தரை எப்போதும் துதிக்கும் ஆராதனை வீரர்களாக வாழ வேண்டும்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth Wing

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

இளம் வாலிபர்களின் அறிவியல் களம் -
Litmus Paper & pH Paper - 5
ஜிம் எலியட் - 6 & 7
ஸ்பெயின் - 10
திரை அடிமைத்தன நோய்க்குறி - 12
Sleep Divorce - 14
மொழிபெயர்ப்பு பணிகளுக்காக... - 15
சரியான நபராக மாறுவது எப்படி? - 20
கனம் பெற்ற அவருடைய பரிசுத்தவான்கள் - 22

# பாடுகளின் களத்தில் மகிழ்ச்சி காண்போம்!

கேரீத் அன்பர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்!

கம்யூனிசச் சிறையில் பல ஆண்டுகள் சித்திரவதை அனுபவித்த ரிச்சர்டு உம்பிராண்டும், அவரது மனைவி சபீனாவும் தாங்கள் கற்றுக்கொண்டதை இவ்விதமாக விளக்கினர், “சிறையில் நாங்கள் இறையியலைக் களைந்து இறைவனைக் கற்றுக்கொண்டோம். இதேப் பாணியில் மார்ட்டின் லூத்தரும், “உபத்திரவங்களுக்குள் வரும்வரை திருவசனத்தின் சரியான பொருள் எனக்கு விளங்கவில்லை” என்றார்.

கிறிஸ்துவின் நிமித்தம் படும் உபத்திரவங்கள் நமக்குக் கர்த்தருக்குள் உண்டாகும் மகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்யும் என்பது தேவனுடைய இராஜ்யத்திற்கு அடுத்த நியமமாகும். நீதிக்காக கர்த்தருடைய வார்த்தையின்படி இசைந்து வாழ நினைத்தவர்களுக்குத் துன்பம் மற்றும் பாடுகள் வரத்தான் செய்யும். இந்த உலகத்தில் துன்பத்தை அனுபவிக்கும்போது கிறிஸ்துவின் பிள்ளைகள் சந்தோஷம் கொள்ள வேண்டும். ஏனெனில் கிறிஸ்தவர்கள் நீதிக்காக எவ்வளவுக்கெவ்வளவு துன்பம் அனுபவிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு உயர்ந்த ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள்.

பவுல் தீமோத்தேயுவிற்குச் சொல்லும்போது: **“கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” (2 தீமோ. 3:12).**

எனவே எனக்குப் பிரியமான வாலிப உள்ளங்களே, நீதியினிமித்தம் துன்பப்பட்டு வேதனைகளைச் சகிக்கிறவர்களுக்குப் பரலோக ஈவுகளும், தேவனுடைய இராஜ்யத்தில் பங்கும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பதன் மூலம் உபத்திரவத்தை அடைபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர். காரணம் பரிசுத்த ஆவியானவர் விசேஷ விதமாக அவர்கள் மேல் தங்கியிருப்பார்.

செப்டம்பர் மாதத்தில் அருமனை, தண்டையார்பேட்டை, சூளைமேடு, ரெட்ஹில்ஸ் ஆகிய முன்னேற்றப்பணி மாவட்டங்களில் நடைபெற்ற வாலிபர் கூடுகைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். தொடர்ந்து அக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ள வாலிபர் கூடுகைகள், முகாம், மிஷன் எக்ஸ்போ ஆகிய ஊழியங்களுக்காக தவறாது ஜெபியுங்கள்.

கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*




REV. DANIEL GNANAPRAGASAM

1st WEEK MESSAGE - TORAH - கோத்திர களம்

மனதிற்கும், உடலுக்கும் இதமும், மகிழ்ச்சியும் தரும் எந்தவொரு அனுபவமும் இன்பமானது. அது நாம் தேடி அலைந்து கண்டுபிடிக்கும் பொருளல்ல. மாறாக நம் வாழ்விலே நாமே உருவாக்கிக்கொள்ளும் கலை. இங்கே வசனங்களை ஏற்றுக்கொள்வதும், பிறருக்கு அவ்வசனங்களை நற்செய்தியாக அறிவிப்பதுமே வாழ்வில் இன்பம் என்ற அற்புதச் செய்தியை வலியுறுத்தும் நப்தலியைக் குறித்து சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

ராகேலின் வேலைக்காரி பில்காளின் 2வது மகனும், யாக்கோபிற்கு 6வது மகனுமாக நப்தலி பிறந்தார். பிள்ளைகளைக் கடவுள் அளிக்கும் இன்பமான பரிசாக மட்டுமே பார்ப்பதற்கு பதிலாக பொறாமைக்கும், சகோதரப் போட்டிக்குமான அடையாளமாக்கி தன் இருதயத்தை வடிவமைத்திருந்தாள் ராகேல். தன்னுடைய தற்காலிக வெற்றியைக் கொண்டாடும் விதமாக "மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன்" என்று சொல்லி அவனுக்கு நப்தலி என்று பேரிட்டாள் (ஆதி. 30:8). நப்தலி என்பதற்கு "என் மல்யுத்தம்" அல்லது "எனது போராட்டம்" என்று பொருள்.

## நப்தலியின் மனநிலையும், சுபாவமும்:

வேதாகமத்திலே நப்தலியைக் குறித்து குறிப்புகள் அதிகம் குறிப்பிடப்படவில்லை. யோசேப்பு உயிரோடிருக்கிறான் என்ற நற்செய்தியை யாக்கோபிற்கு வேகமாக வந்து அறிவித்தவன் இந்த நப்தலி என்று யூத மரபில் கருதப்படுகிறது. வனாந்தர பயணத்தில் இஸ்ரவேலின் அணிவகுப்பு வரிசையில் 12வது (கடைசி) கோத்திரமாகவும், பின் காவலர்களாகவும் செயல்பட்டனர் (எண். 2:29). சுதந்தரிக்கப்பட்ட கானான் தேசத்தில் தங்கள் பகுதியிலிருந்த கானானியர்களைத் துரத்திவிடவில்லை (நியா. 1:33). பின்னாளில் தெபொராளின் தலைமையின் கீழ் நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்த பாராக், ஒரு கூட்டணிப் படையை வழிநடத்தி கானானியர்களைத் தோற்கடித்தார் (நியா. 4:6). அவர்கள் தைரியத்திற்காகப் புகழப்பட்டார்கள் (நியா.5:18). பாராக்கும் விசுவாச வீரர் பட்டியலில் இணைக்கப்பட்டார் (எபி. 11:32). சாலொமோன் ராஜாவின் நாட்களில் ஆலயத்தைக் கட்டும் பணியில் அக்கோத்திரத்தைச் சேர்ந்த கைம்பெண்ணின் மகனான ஈராம் புத்தியும், யுக்தியும், அறிவும் உள்ளவனாயிருந்து சகலவித வெண்கல வேலைகளையும் செய்தான் (1 இராஜா. 7:14). சாலொமோன் ராஜாவிற்கு பிற்பாடு பிரிக்கப்பட்ட வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்த நப்தலி கோத்திரம் அசீரியர்களால் பிடிக்கப்பட்டு (2 இராஜா.15:29) பின்னாளில் விரும்பப்படாத, மறக்கப்பட்ட, இடுக்கமாய் ஈனப்படுத்தப்பட்ட கலிலேய பிராந்திய பகுதியானது (ஏசாயா 9:1). இவ்வாறு நப்தலி கோத்திரத்தார் அதிகப் புகழையோ, கவனத்தையோ பெறாமல் அமைதியாகப் பணியாற்றிக்கொண்டிருந்தனர்.

## தகப்பனின் ஆசீர்வாதம்:

ஆதி. 49:21இல் யாக்கோபு "நப்தலி விடுதலைப் பெற்ற பெண்மான்; இன்பமான வசனங்களை வசனிப்பான்" என்ற சுருக்கமான, தெளிவான ஆசீர்வாதத்தைக் கூறினார். மற்ற சகோதரர்களுக்கு நியமிக்கப்பட்ட வலிமையான, வேலை செய்யும் விலங்குகளைப் போலல்லாமல் நப்தலி கட்டவிழ்த்து விடப்பட்ட பெண்மானுக்கு ஒப்பிடப்படுகிறார். முன்பு கட்டப்பட்டிருந்த மான் இப்போது சுதந்திரமாக திறந்த மலைகளில் துள்ளித் திரிகிற அனுபவத்தை இவ்வசனம் விளக்கிக் காண்பிக்கிறது. "விடியற்கால பெண்மான்" (The doe of the morning) என்று பொருள்படும் தாவீதின் 22ஆம் சங்கீதம் "துன்பத்திலிருந்து துதிக்கு" என்ற முரண்பாடுகளின் கொண்டாட்டத்தை விவரிக்கிறது. இதிலுள்ள துன்பங்களின் விளக்கங்கள் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தை நேரடியாக விவரித்து, அவர் மூலமாய் கிடைக்கப்பெற்ற விடுதலை, எல்லா மக்களுக்கும் வழங்கப்படும் எதிர்கால நம்பிக்கையின் துதிப்பாடல் என்ற கருப்பொருள் நப்தலியின் துள்ளிக்குதிக்கும் பெண்மான் உருவகத்துடன் நேரடியாக இணைகிறது.

## தலைவனின் தரிசனம்:

நப்தலியைக் குறித்து தலைவன் மோசேயின் தரிசனம், நப்தலி கர்த்தருடைய தயவினாலே திருப்தியடைந்து, அவருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பான். நீ மேற்றிசையும், தென்திசையும் சுதந்தரித்துக் கொள் (உபா. 33:23) என்பதாகும். "கர்த்தருடைய தயவு (எபிரெய மொழியில் ராசோன்) என்பது அவருடைய பாதுகாப்பையும், செழிப்பையும் விவரிக்கும் அவருடைய அங்கீகாரத்தைக் குறிக்கிறது. "கர்த்தருடைய ஆசீர்வாதம்" (எபிரெய மொழியில் பெரேகா) என்பது அவர் ஒருவருக்கு வழங்கும் வெற்றி மற்றும் பொருள் உடைமைகளைக் குறிக்கிறது. கானானில் தொலைதூர வடக்கில் கலிலேய கடலுக்கு வடமேற்கே லெபனான் மலைகள் வரை பரவியிருந்த ரம்மியமான மலைப்பாங்கான பகுதியில் 19 நகரங்களை நப்தலி கோத்திரத்தார் பெற்றிருந்தனர் (யோசுவா 19:32-39). "கெனசோர் பள்ளத்தாக்கு" என்று

-இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# Litmus Paper & pH Paper




Hi Teens, School Chemical Laboratoryஇல் நாம் பயன்படுத்தும் இரு பேப்பர் ஸ்லிப் Litmus Paper & pH Paper பற்றி பார்க்கலாம்.

**Litmus Paper:**

Acid or Base என்பதை அறிய உதவும் குறிகாட்டித் தாள். இதன் முக்கிய பயன்பாடு பொருள் அமிலமா அல்லது காரமா? என்பதை அறிய, Blue Litmus- Acidஇல் Red ஆகும். Red Litmus- Baseஇல் Blue ஆகும்.

**pH Paper :**

ஒரு கரைசலின் pH அளவை தோராயமாக அறிய உதவும் குறிகாட்டித் தாள். இதன் முக்கிய பயன்பாடு பொருள் எவ்வளவு அமிலத்தன்மை அல்லது காரத்தன்மை கொண்டது என்பதை அறிய pH பேப்பர் ஒரு கரைசலுடன் தொடர்பு கொள்ளும்போது நிறம் மாறும். அந்த நிறத்தை pH நிற அட்டவணையுடன் ஒப்பிட்டு pH அளவை தோராயமாகக் கண்டறியலாம்.

pH Scale 0 — 1 — 2 — 3 — 4 — 5 — 6 | 7 | 8 — 9 — 10 — 11 — 12 — 13 — 14

0–6 Acidic / அமிலத்தன்மை / 7 Neutral / நடுநிலை / 8 - 14 Alkaline/Basic / காரத்தன்மை

**எளிய வித்தியாசம் என்னவென்றால்:**

LITMUS தாள் ஒரு திரவம் அமிலமா? காரமா? என்பதை அறிய, pH தாள் எவ்வளவு அமிலத்தன்மை? எவ்வளவு காரத்தன்மை? என்பதை அறிய, இரண்டு விதமான குறிகாட்டியும் தேவை என்பதை நீ அறிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்." மத்தேயு 12:34 என்று வேதம் நமக்கு சொல்லுகிறது. "தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையைச் சோதிக்கும் pH பேப்பராக இருக்கட்டும்." நம் வாழ்க்கையில் LITMUS தாள் மூலம் கண்டறியும் காரியங்கள் எவை மற்றும் pH தாள் மூலம் கண்டறியும் காரியங்கள் எவை என்பதை முதலில் கற்றுக்கொள்வோம். பின்பு அவற்றை எப்படி பயன்படுத்தவேண்டும் என்று பார்ப்போம்.

**LITMUS தாள் மூலம் என்ன கண்டறியலாம்?**

வேதியியல் ஆய்வகத்தில் Litmus Paper ஒரு கரைசலின் அடிப்படைத் தன்மையை அறிய உதவுகிறது. அதேபோல், நம் வாழ்க்கையிலும் சில காரியங்கள் நம்முடைய உள்ளார்ந்த தன்மையை வெளிப்படுத்துகின்றன.

நம் வாழ்க்கையின் "LITMUS TEST"

- ♣ நம் வார்த்தைகள் — Our Words: நாம் பேசும் வார்த்தைகள் நம் இருதயத்தில் இருப்பதை வெளிப்படுத்துகின்றன.
- ♣ நம் மனப்பான்மை — Our Attitude: சூழ்நிலை மாறும்போது நம்முடைய உண்மையான மனப்பான்மை வெளிப்படும்.
- ♣ நம் செயல்கள் — Our Actions: நாம் உண்மையில் எதை நம்புகிறோம் என்பதை நமது செயல்கள் காட்டுகின்றன.
- ♣ நம் கீழ்ப்படிதல் — Our Obedience: தேவனுடைய வார்த்தையை அறிந்திருக்கிறோமா என்பது மட்டுமல்ல; தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறோமா என்பதையும் காட்டுகிறது.
- ♣ நம் உறவுகள் — Our Relationships: மற்றவர்களை நாம் எப்படி நடத்துகிறோம் என்பது நம் உள்ளத்தின் தன்மையை வெளிப்படுத்துகிறது.

LITMUS வாழ்க்கைப் பாடம்: "என் வாழ்க்கையின் தன்மை என்ன?" "What is the nature of my life?"

pH தாள் மூலம் என்ன கண்டறியலாம்?

வேதியியலில் pH Paper ஒரு கரைசல் எவ்வளவு அமிலத்தன்மை அல்லது எவ்வளவு காரத்தன்மை கொண்டது என்பதைத் தோராயமாகக் காட்டுகிறது. அதேபோல், ஆன்மீக வாழ்க்கையில் ஒரு காரியம் இருக்கிறதா இல்லையா? என்பதைக் காட்டுவது மட்டுமல்லாமல், அது எந்த அளவில் இருக்கிறது? என்பதையும் நாம் சிந்திக்கலாம்.

நம் வாழ்க்கையின் "pH TEST"

- ♣ விசுவாசத்தின் அளவு (Level of Faith): என் விசுவாசம் வளர்ந்து கொண்டிருக்கிறதா?
- ♣ அன்பின் அளவு (Level of Love): நான் தேவனையும் மற்றவர்களையும் எவ்வளவு அன்பு செய்கிறேன்?
- ♣ கீழ்ப்படிதலின் அளவு (Level of Obedience): நான் கேட்பவனா? அல்லது கேட்டு செயல்படுகிறவனா?
- ♣ ஜெபத்தின் அளவு (Level of Prayer): என் ஜெப வாழ்க்கை வளர்ந்து கொண்டிருக்கிறதா?
- ♣ பரிசுத்தத்தின் அளவு (Level of Holiness): என் வாழ்க்கை தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக வளர்கிறதா?
- ♣ தேவனுடைய வார்த்தையுடன் தொடர்பின் அளவு — Level of Word Connection: தேவனுடைய வார்த்தை என் வாழ்க்கையில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

**இரண்டையும் எளிதாக நினைவில் வைத்துக்கொள்:**

LITMUS TEST - "WHAT?" - என் வாழ்க்கையின் தன்மை என்ன? அதாவது Character / Nature

pH TEST - "HOW MUCH?" - என் வாழ்க்கையில் அது எந்த அளவில் இருக்கிறது? அதாவது Level / Growth

சுருக்கமாக சொன்னால்: LITMUS கேட்கும் - "நான் எப்படிப்பட்டவன்?"; pH கேட்கும் - "நான் எந்த அளவில் இருக்கிறேன்?" தேவனுடைய வார்த்தை கேட்கிறது: "நான் உண்மையில் தேவனுக்கு முன்பாக எப்படி இருக்கிறேன்?"

2 கொரிந்தியர் 13: 5, 6 நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறிகிறீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள். நாங்களோ பரீட்சைக்கு நில்லாதவர்களல்லவென்பதை அறிவீர்களென்று நம்புகிறேன்.

"Chemistry labஇல் solution-ஐ test செய்கிறோம்; வாழ்க்கையில் நம்மையே test செய்ய வேண்டும்."

Ok, bye teens.

இளம் வாலிபர் பகுதி - அறிவியல் களம்

MR. ISAAC KAMALESH

# ஜிம் எலியட்

(23.03.1967 - 01.12.1994)



**பிறப்பு:**

சகோ. பேட்ரிக் ஜாஷ்வா (FMPBஇன் முன்னாள் பொதுச்செயலர்). சுசீலா தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக 1967ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் நாள் பிறந்தார்.

**கிறிஸ்துவுக்குள்ளான வளர்ப்பு:**

இவரது பெற்றோர் மிஷனெரிகளாக ஊழியம் செய்து வந்த காரணத்தினால் சிறுவயது முதலாக நல்ல ஆவிக்குரிய வழியில் வளர்க்கப்பட்டார். ஜெபம், விசுவாசம், பரிசுத்தம், எளிய வாழ்வு, தியாகம் போன்றவற்றை சிறுவயது முதல் நன்கு கற்று அதன் வழியில் நடப்பவராக காணப்பட்டார். அழியும் மக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்கின்ற ஆத்தும பாரம் கொண்டவராக வளர்க்கப்பட்டார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அனைத்து கூடுகையிலும் இவரை பங்கு கொள்ளச்செய்து, மிஷனெரி பணிக்கு தன்னை அர்ப்பணித்திடச் செய்யும் விதமாக வளர்க்கப்பட்டார்.

**படிப்பு:**

சகோ. ஜிம் எலியட் சென்னையில் உள்ள புனித பால் பள்ளியில் தனது +2 படிப்பை முடித்தார். பின்பதாக சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தனது கல்லூரி படிப்பையும், திருப்பத்தூரிலுள்ள Secret Heart Collegeஇல் தனது மாஸ்டர் டிகிரியையும் முடித்தார். எப்பொழுதும் மற்றவர்களை மகிழ்விப்பதோடு, அவர்களுக்கு உதவி செய்வதிலும், சோர்ந்து போனவர்களை ஊக்குவிப்பதிலும் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

**EFICORஇல் இணைதல்:**

சகோ. ஜிம் எலியட் 1991ஆம் வருடம் EFICORஇல் இணைந்தார். அவ்வியக்கத்தில் பயிற்சியை முடித்தப்பின், வாரணாசியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணியில் அமர்த்தப்பட்டார். 23 வயதான ஜிம் எலியட் துடிப்புடனும், ஆர்வத்துடனும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். பாதிக்கப்பட்ட மக்களின் தேவையை அறிந்து, அதைப் பெற்றுக் கொடுப்பதில் முனைப்புடன் செயல்பட்டார்.

**மால்தோ மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய அழைப்பு:**

மால்தோ மக்களைப் பற்றியதான காரியங்கள் ஜிம் எலியட்டின் மனதை இளகச் செய்தது. மலேரியா, காலஜார், காலரா, டி.பி போன்ற வியாதிகளினால் அழிந்து வருவதைக் கேள்விப்பட்டு அவர்களுக்கு உதவி செய்திட வேண்டும் என உள்ளத்தில் தீர்மானம் கொண்டார். மால்தோ மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும், சுகாதார நல்வாழ்வு பெறவும் தன்னை தேவனுக்குள் மால்தோ மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டார்.

**தனது குடும்பத்தைவிட மால்தோ மக்களை நேசித்த ஜிம் எலியட்:**

ஒரு முறை ஜிம் எலியட்டின் தாயார் மிகுந்த கவலைக்கிடமாக எதுவும் நேரிடலாம் என்ற நிலையில் இருந்தபோது ஜிம் எலியட்டை ஜார்க்கண்டிற்கு செல்ல வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் அங்கு பல ஆயிரம் தாய்மார்கள் மரணப்படுக்கையில் இருப்பதால் அவர்களைக் காப்பதே தனது முதல் கடமை எனக் கூறி புறப்பட்டார். ஆனால் ஜிம் எலியட் பிரயாணத்தில் இருக்கும்போதே அவரது தாயார் கர்த்தருக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டார். உடனே புறப்பட்டு வந்து தாயாருக்குச் செய்ய வேண்டிய இறுதி காரியங்களைச் செய்து விட்டு ஜார்க்கண்ட் திரும்பிச் சென்றார்.

**மலேரியா கொசுவிடமிருந்து மால்தோ மக்களைப் பாதுகாக்க ஜிம் எலியட் எடுத்த முயற்சிகள்:**

மலேரியா கொசுவிடமிருந்து மக்களைப் பாதுகாக்க கிராமங்கள்தோறும் மால்தோ மக்களின் வீடுகளில் D.T.T. மருந்து தெளிக்கும் பணியை முன்னின்று நடத்தினார். 6 மாதங்களில் 290க்கும் அதிகமான கிராமங்களில் இப்பணியை பல மைல் தூரம் நடந்தே சென்று நிறைவேற்றி முடித்தார். அரசு அதிகாரிகளும், புறஜாதி மக்களும் இவரது அர்ப்பணிப்பைக் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்தனர்.

**மால்தோ மக்களைக் குறித்ததான ஜிம் எலியட்டின் தூர தரிசனம்:**

சகோ. ஜிம் எலியட் மால்தோ மக்கள் மற்ற ஜாதி மக்களைப்போல் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்று ஆவல் கொண்டு, மால்தோ பிள்ளைகளை நன்கு படிக்க ஊக்குவித்தார். இவர்கள் ஒரு வலிமையுள்ள சமுதாயமாக மாற வேண்டும் என கனவு கண்டார். துக்கமுகத்துடன் காணப்படும் மால்தோ மக்கள் ஒருநாள் சிரித்த முகத்துடன் காணப்படுவார்கள் என்று கூறினார். எனது கண் பார்வையில் எந்தவொரு மால்தோ மனிதனும் இப்படிப்பட்ட கொடிய வியாதியால் மரிக்கக் கூடாது எனக் கூறி அதற்காக அயராது உழைத்தார்.

**மால்தோ மக்களுக்காக ஜிம் எலியட் செய்த அரும் பணிகள்:**

மால்தோ மக்கள் குறிப்பாக மலேரியா, காலரா வியாதிகளினால் தாக்கப்பட்டு போதுமான மருத்துவ வசதி இல்லாததால் வியாதிகள் அதி விரைவாக பரவி மக்கள் கூட்டங்கூட்டமாக மடிந்து வந்தனர். ஆகவே ஜிம்

எலியட் மருத்துவக் குழுவில் தன்னை இணைத்துக் கொண்டு வியாதிப்பட்டவர்களை தனது இரு சக்கர வாகனத்தில் அமர்த்தி இரவு பகல் என பாராமல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். தான் அதிகம் படித்திருந்த போதும், அதைப் பெரிதாக கருத்தில் கொள்ளாமல் வியாதிப்பட்டவர்களுக்கு மண்சட்டியில் அரிசி கஞ்சி செய்து கொடுத்தார். எளிமைக்கும், அன்பிற்கும் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

**சுகாதார நல மையம் குறித்ததான ஜிம் எலியட்டின் எண்ணம்:**

மருத்துவமனை வசதி இல்லாத மால்தோ மக்களுக்கென ஒரு மருத்துவமனை உருவாக வேண்டும் என எண்ணம் கொண்டார். ஆம்! அவரது கனவு இன்று நிறைவு பெற்றுள்ளது. பர்ஹெய்ட் பகுதியில் சந்திரகோடா என்னுமிடத்தில் ஜிம் எலியட்டின் நினைவாக ஒரு மருத்துவமனை அமையப் பெற்றுள்ளது. இங்கு மருத்துவர், செவிலியர்கள் மற்றும் முற்றிலும் நவீன வசதிகள் கொண்ட மருத்துவக் கருவிகள் கொண்டு பணி செய்து வருகின்றனர். 23 வயதான ஜிம் எலியட்டின் உண்மையான தரிசனத்தினாலும், இடைவிடாத ஜெபத்தினாலும் இந்த மருத்துவமனை உருவானது என்பதே உண்மையான கூற்று.

**மால்தோ பிள்ளைகளிடத்தில் ஜிம் எலியட் கொண்டிருந்த அன்பு:**

ஜிம் எலியட் மால்தோ பிள்ளைகளை அதிகமாக நேசித்து, அவர்களை அன்பாய் தூக்கி மகிழ்ந்து வந்தார். அழுக்கான பிள்ளைகள் என ஒதுக்காமல் அவர்களை குளிப்பாட்டி விடுதல், நகம் வெட்டி விடுதல், தலைமுடி வெட்டி விடுதல், தலைக்கு எண்ணெய் வைத்து விடுதல் மற்றும் காயங்களுக்கு மருந்து வைத்தல் போன்ற பணிகளை முழு மனதுடன் செய்து வந்தார். பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதையும் கல்வியறிவின் அவசியத்தின் உண்மைகளையும் பிள்ளைகளின் பெற்றோருக்கு எளிமையாக எடுத்துக் கூறினார்.

**சகோ. ஜிம் எலியட்டின் தாழ்மையும், எளிமையும்:**

சகோ. ஜிம் எலியட் நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்தவர். ஆகவே தன்னை வசதியாக அமைத்துக்கொள்ளும் வாய்ப்பு இருந்தபோதிலும், மிகவும் எளிமையாக வாழ்ந்தார். தனது மாத வருமானத்தை பெருமளவில் ஏழைகளுக்கும், தேவையுள்ளவர்களுக்கும் கொடுத்து உதவினார். ஒரு சாதாரண அட்டைப் பெட்டியில் தனது துணி மற்றும் பொருட்களை வைத்துக்கொண்டு ஊழியம் செய்து வந்தார். ஏழையோடு ஏழையாக அமர்ந்து உணவருந்தி, அவர்களோடு இரவு நேரங்களில் படுத்து உறங்கினார். மால்தோ மக்கள் கொடுத்த மிகச் சாதாரண உணவை மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். எலியட்டின் தந்தை, ஒரு கட்டில் வாங்கிக் கொள்ள கூறியபொழுது, பாயே போதுமானது எனக் கூறி மறுத்துவிட்டார்.

**சகோ. ஜிம் எலியட்டின் இதய விருப்பம்:**

மால்தோ மக்கள் அடிமைக் கட்டிலிருந்து வெளியேற வேண்டும் என எண்ணம் கொண்டு கடுமையாக உழைத்தார். ஒடுக்கப்பட்டு வரும் மால்தோ மக்கள் ஆளும் வர்க்கமாய் மாற வேண்டும் என ஆவல் கொண்டார். மால்தோ மக்கள் அனைவரும் கல்வியறிவு பெறுது, மற்ற மக்களைப் போல் மால்தோ மக்களும் அடிப்படை வசதிகளில் பூரணராகும்படி ஆசைப்பட்டார். இதற்காக உழைத்து பல இன்னல்களுக்கு ஆளானார்.

**சகோ. ஜிம் எலியட்டின் மரணம்:**

மால்தோ மக்களுக்காக மருத்துவப்பணி செய்து வந்த சகோ. ஜிம் எலியட், செரிப்ரல் மலேரியா மற்றும் மஞ்சள் காமாலை வியாதியால் தாக்கப்பட்டார். மிகுந்த கவலைக்கிடமாக இருந்த ஜிம் எலியட்டை கல்கத்தா ஏ.ஜி. மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் டிசம்பர் 1ஆம் தேதி 1994ஆம் வருடம் தன் நாட்களை தேவனுடன் கழிப்பதற்காக விண்ணுலகிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இரவும் பகலும் தேவனுக்காக அயராது உழைத்த ஜிம் எலியட் நித்திய ஓய்வு பெறுவதற்காக தேவனால் தன் வீட்டிற்கு அழைத்துக் கொள்ளப்பட்டார். இவரது இறுதி அஞ்சலி நேரத்தில் அவரது தந்தை திரு. பேட்ரிக் ஜாஷ்வா அண்ணன் எனது மகனை அநேக மால்தோ மக்களோடு கூட தேவராஜ்ஜியத்தில் பார்ப்பேன் என கூறினார். 26 வயது நிறைந்த ஜிம் எலியட் பர்ஹர்வா என்னுமிடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

**ஜெபவேளையில் சகோ. ஜிம் எலியட் பற்றி கூறப்பட்ட கூற்றுகள்:**

**மால்தோ மக்கள்:** தனது தாயார் மரணப்படுக்கையில் இருந்த நேரத்தில் மால்தோ மக்களின் நலன் கருதி புறப்பட்டு வந்த இந்த நல்ல சகோதரனை எப்பொழுது பார்ப்போம் என அழுதனர்.

**மிஷனெரிகள்:** மால்தோ மக்களுக்காக தன் உயிரையும் தருவேன் என கூறினார். அவ்விதமாகவே தன் உயிரைக் கொடுத்து உயர்ந்து நின்றார். மால்தோ மக்களின் தேவை என்ன என்பதை கண்டறிந்து அதைப் பூர்த்தி செய்து தருவதில் அதிக அக்கறையும், அன்பும், உண்மையும் கொண்டவர்.

**திரு. பேட்ரிக் ஜாஷ்வா:** ஒரு நாள் இரவு தன்னுடன் மால்தோ மக்களின் முன்னேற்றம் குறித்து விவாதித்து வந்ததாகவும், மால்தோ மக்களைக் கட்டாயம் மேம்படுத்த வேண்டும் எனவும் கூறிய ஜிம் மால்தோ மக்களுக்காக தன்னையே தியாகம் செய்துள்ளார் எனறார்.

**மால்தோ வாலிபர்கள்:** சகோ. ஜிம் எலியட்டின் இடத்தை நாங்கள் நிரப்புவோம் என உறுதிப் பூண்டனர். தமிழ்நாட்டிலும் அநேக வாலிபர்கள் ஜிம் எலியட்டின் இடத்தை நிரப்புவோம் என உறுதி பூண்டனர்.

**முடிவுரை:**

26 வயதே நிறைந்த ஜிம் எலியட்டை அவரது தந்தை திரு. பேட்ரிக் ஜாஷ்வா அவர்கள் மால்தோ மக்களுக்காக காணிக்கையாய்க் கொடுத்துள்ளார். மால்தோ மக்களைக் காப்பாற்றவே தனது மகனை ஜார்க்கண்டிற்கு அனுப்பி வைத்தார். நமது தேசத்தில் அநேக ஜாதி மக்கள் உள்ளனர். அவர்களை ஆண்டவரிடம் கொண்டு வருவதற்கு நமது பங்கு என்ன?

*உலகத்தை வெறுத்துத் துணிந்து வா!*
*உன்னத வேலையை உணர்ந்து வா!*
*பாவத்தில் மாளும் மனிதனை மீட்க*
*பரிவுடன் நீயும் வந்திடாயோ?*

என்ற தேவனின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்த ஜிம் இன்று ஆண்டவரின் தோட்டத்தில் அழகான பூவாய் சிரிக்கிறார்.

*இதை வாசிக்கும் அன்பான வாலிபர்களே! இயேசுகிறிஸ்துவுக்காக பாடுகளைத் தாங்கி சாட்சியாக வாழ்ந்து, பரலோகத்திற்கு ஆத்துமாக்களைச் சேர்க்கும் பணிக்கு வர நீங்கள் ஆயத்தமா?*




MR. ISAAC KAMALESH

ஆகாய் கண்ட களம் யூதா மற்றும் பென்யமின் கோத்திரங்களிலிருந்த தெற்குத் திசை ராஜ்யமான யூதா ஜனங்களுக்குச் சொன்ன தீர்க்கதரிசனம். ஆகாய் மற்றும் சகரியா ஒரே காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள். இதை எஸ்றா 5 மற்றும் 6ஆம் அதிகாரத்தில் காணலாம். ஆகாய் என்பதற்கான அர்த்தம் என் பண்டிகை (My Feast). ஆகாய் மற்றும் சகரியா இவர்களைப் பற்றி கூற வேண்டுமென்றால், ஆகாய் நான்கு மாதம் ஊழியம் செய்தவர், சகரியா நாலு வருஷம் ஊழியம் செய்தவர். ஆகாயின் நான்கு மாத ஊழியத்தில் நான்கு செய்திகள் உள்ளது. அதுவும் மூன்று மாத இடைவெளியின் செய்தி. இதுதான் இந்த புத்தகம். இந்த புத்தகத்தில் நாள், தேதி, மாதத்தோடு சொல்லப்பட்ட செய்தியில் அதன் முக்கியத்துவத்தை அறியலாம். இந்த செய்தியை முழு ஜனங்களுக்கும் சொன்னாரா என்றால் அது இல்லை. அது தலைவர்களுக்கு சொல்லப்பட்டது. இன்றைய நாளில் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இன்றைய தலைவர்களுக்கு அது ஏற்ற செய்தி என்று சொல்லலாம். திருச்சபைகளுக்கும் சரி, நிறுவனங்களுக்கும் சரி, சங்கங்களுக்கும் சரி, ஆரம்பத்தில் அவருடைய கீழ்ப்படிதல் கிறிஸ்துவுக்காக புறப்பட்டு வருதல், பணிகளை ஆரம்பித்தல் என்று சகலமும் சீரும், சிறப்புமாக நடைபெறுகிறது. ஆனால், ஒரு இடைவெளியில் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதை விட்டுவிட்டு தங்கள் ராஜ்யத்தை கட்டமைகின்றனர்.

ஆகாயை வேதம் சொல்லுகிறது, கர்த்தருடைய தூதனாகிய ஆகாய் என்று. இவருக்கு வயது கிட்டத்தட்ட 70 ஆக இருக்கலாம். சொன்ன சாராம்சம் முக்கியம் வாய்ந்தது. தலைவர்களுக்கு என்று சொன்னேன், ஒன்று ஆளுநர், இன்னொன்று ஆசாரியன். ஆளுநர் செருபாபேல், ஆசாரியன் யோசுவா.

இப்பொழுது சற்று பின் நோக்கி நாம் செல்லுவோம். இஸ்ரவேலில் முதல் ராஜா சவுல், இரண்டாவது ராஜா தாவீது, மூன்றாவது ராஜா சாலொமோன். சாலொமோனுக்குப் பிறகு ராஜ்யம் இரண்டாக பிரிந்தது. 10 கோத்திரங்கள் சேர்ந்து வடக்கு ராஜ்யமாக இஸ்ரவேல் என்ற பெயரிலும், 2 கோத்திரங்கள் யூதா, பென்யமின் தெற்கு யூத கோத்திரமாகவும் பிரிந்துப்போனது. இரண்டு பகுதி ஜனங்களுமே ஓய்வுநாளை அனுசரிக்காமல், பண்டிகையைச் சடங்காச்சாரமாக மாற்றினர். பொய், விபச்சாரம், கடவுளை விட்டு தூரம் போகுதல் என்று அடுக்கடுக்கான பாவங்களைச் செய்தது. இஸ்ரவேல் 210 ஆண்டுகள் கழித்து அசீரியர்களால் சிதறடிக்கப்பட்டது. யூதாவுக்கோ எண்ணம் ஆலயம் நம்மிடத்தில் இருப்பதால் தேவன் அந்த பகுதியை எதிரிகள் கையில் ஒப்புக்கொடுக்கமாட்டார் என்று. அந்த எண்ணம் சரி என்றாலும் அவர்கள் பாவத்திலிருந்து வெளிவரவில்லை. இந்த இரண்டு பகுதிக்கும் வந்த தீர்க்கதரிசிகள் தான் 12 சிறிய தீர்க்கதரிசிகள் மற்றும் நான்கு பெரிய தீர்க்கதரிசிகள். 325 ஆண்டுகள் கழித்து யூதா, பாபிலோன் கையில் அடிமைப்பட்டு போனது. மூன்று படையாக யூதா ஜனங்கள் சிறையிருப்புக்குப் போனார்கள். இப்படி சென்றவர்கள் சுமார் 70 ஆண்டுகள் பாபிலோனில் சிறைப்பட்டுக் கிடந்தார்கள். இப்பொழுது பாபிலோனியர்களை பெர்ச்சிய ராஜ்யம் அடிமைப்படுத்திக் கொண்டார்கள். மேதியபெர்ச்சியாவின் ராஜா தரியு (சைரஸ்), யூதர்களைப் பார்த்து நீங்கள் உங்கள் தேசத்திற்கு செல்லலாம். அங்கு சென்று இடிந்து போன ஆலயத்தைக் கட்டுங்கள் என்ற ஒரு நற்செய்தியைக் கொடுக்கிறான். இதில் கீழ்ப்படிந்து புறப்பட்டவர்கள் சுமார் ஐம்பதாயிரம் மக்கள். வேதம் துல்லியமாக சொல்கிறது 42,360. இப்பொழுது ஆகாய் புத்தகத்திற்குள் செல்வோம்.

ஆசாரியன், ஆளுநர் ராஜாவின் நற்செய்திக்கு இணங்கி தங்கள் சொந்த தேசத்திற்கு வந்தவர்கள். ஆலயம் கட்ட ஒரு தீர்க்கமான தீர்மானத்தோடு புறப்பட்டவர்கள், வந்து சேர்ந்த உற்சாகத்திற்கு குறைவில்லை. ராஜாவின் ஒத்துழைப்பினாலும், அதிகாரத்தினாலும் முதலில் பலிபீடத்தைக் கட்டினார்கள். ஆலயத்திற்கு அடித்தளம் போட்டார்கள். ஆனால் ஏற்கனவே அங்கு இருந்த தங்கள் சொந்த ஜனங்களைக் கையாளத் தெரியவில்லை. ஏன் அங்கு வாழ்ந்த சமாரியார்களை எதிர்கொள்ள முடியவில்லை. விளைவு திரும்பி பார்த்தால் 16 ஆண்டுகள் கழிந்து விட்டது. ஆலயம் அடித்தளத்தோடு நிற்கிறது. இவருடைய வாழ்க்கையிலே அவர்கள் இரண்டு ஆண்டுகள் கழித்து, தங்கள் தங்கள் வீட்டைக் கட்ட சென்று விட்டார்கள். விளைவு விவசாயத்தில் விளைச்சலில்லை. பொருளாதாரத்தில் நஷ்டம் மற்றும் பண வீக்கம் இதைத் தான் ஆகாய் தீர்க்கதரிசி எச்சரிக்கிறார். பழைய உடன்படிக்கையில் கீழ்ப்படிந்தவர்களுக்கு பூவுலக ஆசீர்வாதம் உண்டு என்று வேதம் சொல்லுகிறது. லேவி. 26:18-20, உபா. 28: 38-40 இவைகளை வாசித்துக் கொள்ளலாம். இப்போது ஆகாய் புத்தகத்தை வாசிக்கும் முறைக்குள் வரலாம்.

முதலாம் அதிகாரம் செப்டம்பர் மாத செய்தி. இரண்டாம் அதிகாரம் முதல் 9 வசனங்கள் அக்டோபர் மாத செய்தி, மீதி உள்ள பகுதி டிசம்பர் மாத செய்தி. டிசம்பர் மாதத்தில் இரண்டு செய்திகள். முதல் மாத செய்தி மக்களை வேலை செய்வதற்குத் தூண்டிய செய்தி Message direct to HAND என்று சொல்லலாம். இரண்டாம் மாத செய்தி மக்களின் பொறுமைக்கான செய்தி Message direct to HEART என்று சொல்லலாம். டிசம்பர் மாத இரண்டு செய்தியும் Message direct to HEAD என்று சொல்லலாம். நான்கு செய்திகளின் சுருக்கத்தை நாம் கற்றுக்கொள்வோம்

கடவுளின் அறிவுறுத்தல் - ஆலயத்தைக் கட்டுங்கள்! என்பது தான். மக்களின் அலட்சியம் - கர்த்தருடைய வீடாகிய ஆலயத்தை மீண்டும் கட்டுவதற்கான காலம் இன்னும் வரவில்லை என்று கூறுகிறார்கள். கடவுளின் நினைவூட்டல் - மக்களின் மனப்பான்மை - ஆலயம் பாழடைந்து கிடக்கையில், அவர்கள் ஆடம்பரமான வீடுகளில் வசிக்கிறார்கள். விளைவு அவர்கள் அதிகம் பயிரிடுகிறார்கள். ஆனால் குறைவாகவே அறுவடை செய்கிறார்கள். அவர்கள் பல காரியங்களை முயற்சிக்கிறார்கள். ஆனால் அனைத்திலும் தோல்வியடைகிறார்கள். கடைசியாக கடவுளின் உறுதிமொழி - நீங்கள் கட்டினால், நான் ஆசீர்வதிப்பேன் என்பதே. செய்தியின் சுருக்கம் ஜனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க தெரியவில்லை. மச்சி பாவப்பட்ட வீடுகளில் குடியிருப்பது தவறில்லை. ஆனால் எதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ, அதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறினது, இரண்டாவது தோல்வியில் இருந்து பாடம் கற்கவில்லை அல்லது தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்று நினைத்துப் பார்க்கவில்லை. Don't Give up - on the temple / Do Go up - on the mountain / Get all Stirred up- about the Lord.

இரண்டாம் அதிகாரம் முதல் பகுதி, எளிய முறையில் அமைக்கப்பட்ட இரண்டாவது ஆலய கட்டுமானத்தில் அழுகையும், மகிழ்ச்சியும் கலந்த உணர்வுகள் காணப்படுகின்றன. ஏனெனில், முதியவர்கள் சிலர் முதல் ஆலயத்தின் (சாலொமோனின் ஆலயம்) மகிமையையும், சிறப்பையும் நினைவுகூருகிறார்கள்.

இரண்டாம் அதிகாரத்தின் கடைசி பகுதியின் செய்தி - சிந்தித்துப் பாருங்கள் என்பதே. இரண்டு உண்மைகள் மக்கள் சிந்திக்க வேண்டும் என்று ஆகாய் விரும்புகிறார். 1. கடந்தகால பிரச்சனைகள், 2. எதிர்கால வாக்குறுதிகள். கடைசியாக செருபாபேல் உயர்த்தப்படுதல் - யூதாவின் இந்த உண்மையுள்ள ஆளுநரை ஒரு நாள் கனப்படுத்தி உயர்த்துவதாக தேவன் வாக்குறுதி அளிக்கிறார்.

தம்பி, தங்காய்! ஆகாய் சுருக்கம், முதலில் ஆரம்பித்த உற்சாகம் வாழ்க்கை முழுவதும் தொடர வேண்டும். வாழ்வில் முக்கியத்துவம் கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். தோல்வியின் மத்தியில் தேவன் உன்னோடு என்ன பேசுகிறார் என்று அறியவேண்டும். இன்னும் இந்த இரண்டு அதிகாரத்தின் மூலமாக தேவன் உன்னோடு அநேக காரியங்களைப் பேசலாம். உன்னையும் ஒரு முத்திரை மோதிரமாக வைப்பார். ஆமென்!

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!

## MAINPAT MISSION FIELD
## சத்தீஸ்கர்

மெயின்பாட் (MAINPAT) சத்தீஸ்கரின் "சிம்லா" என்று அழைக்கப்படுகிறது. இது அம்பிகாபூரிலிருந்து சுமார் 55 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஒரு சமூக மேம்பாட்டு வட்டமாகும். இந்த மலைப்பகுதி உல்டா பானி (Ulta Pani) அல்லது பிசார் பானி (Bisar Paani) எனப்படும், புவியீர்ப்பு விசைக்கு எதிராக நீர் மேல்நோக்கிப் பாய்வது போல் தோன்றும் அதிசயமான நீரோட்டத்திற்குப் புகழ்பெற்றது.

1962–63 காலகட்டத்தில் ஏராளமான திபெத்தியர்கள் இந்தியாவிற்கு குடிபெயர்ந்தனர். இந்திய அரசு அவர்களுக்கு மெயின்பாட் மலைப்பகுதியில் நிலம் ஒதுக்கியது. உள்துறை அமைச்சகம் சுமார் 1,400 திபெத்திய குடியேறிகளுக்கு 3,000 ஏக்கர் நிலத்தை வழங்கியது. இதனால் மெயின்பாட் "மினி திபெத்" என்றும் அழைக்கப்படுகிறது. இது சத்தீஸ்கரின் சுர்குஜா மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு வளர்ச்சி வட்டமாகும். இதில் 46 கிராமங்கள் உள்ளன. இந்த வட்டத்தின் நிர்வாகம் வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) தலைமையில் நடைபெறுகிறது.

**உயரமும் நில அமைப்பும்:**

கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 1,100 மீட்டர் (சுமார் 3,200 அடி) உயரத்தில் அமைந்துள்ள மெயின்பாட், அலைபோன்ற பீடபூமிகள் மற்றும் அடர்ந்த சால் மரக் காடுகளைக் கொண்டுள்ளது.

**மக்கள் தொகை அமைப்பு:**

மெயின்பாட் பகுதியில் ஓராவன், கன்வார் மற்றும் மலை கோர்வா (Pahadi Korwa) போன்ற பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இதனுடன், 1960களில் இங்கு குடியேறிய குறிப்பிடத்தக்க திபெத்திய அகதிகள் குடியிருப்பும் உள்ளது.

மலை கோர்வா மக்களிடையே பணியாற்றுவதை நாங்கள் விரும்புகிறோம்.

**மலை கோர்வா மக்கள்:**

மலை கோர்வா (Pahadi Korwa / Hill Korwa) மக்கள், இந்தியாவிலுள்ள 75 குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுக்களில் (PVTGs) ஒன்றாகும். இவர்கள் பட்டியல் பழங்குடியினராகவும் (Scheduled Tribe) அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

- மக்கள் தொகை: கணக்கெடுப்பின்படி சுமார் 1.30 லட்சம்
- குறிப்பிட்ட பகுதியில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை: 54

**மொழி:**

இவர்களின் தாய்மொழி கோர்வா. இது ஆஸ்ட்ரோ ஆசிய மொழிக் குடும்பத்தின் முண்டா (Munda) கிளையைச் சேர்ந்ததாகும். இவர்கள் சத்தீஸ்கரி மற்றும் சத்ரி (Sadri) மொழிகளையும் பேசுகின்றனர்.

**சமூக - பொருளாதார நிலை:**

பாரம்பரியமாக மலை கோர்வா மக்கள் வேட்டையாடுதல் மற்றும் காடுகளில் இருந்து கிடைக்கும் பொருட்களைச் சேகரித்தல் போன்றவற்றைச் சார்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களில் பலர் ஜூங்கா விவசாயம் (Jhoonga Kheti) எனப்படும் இடமாற்று/வாழ்வாதார விவசாய முறையைப் பின்பற்றுகின்றனர். நிலத்தை இழத்தல் அல்லது வெளியிலிருந்து வரும் வியாபாரிகளிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்குதல் போன்ற காரணங்களால், பலர் விவசாயக் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

**வீடுகள்:**

பாரம்பரியமாக, இவர்கள் சிறிய, தனித்தனியாக அமைந்துள்ள மண் குடிசைகளை (கும்பா) கட்டுகின்றனர். இக்குடிசைகள் புல் மற்றும் சால் இலைகளால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்டிருக்கும். இவர்களின் குடியிருப்புகள் பெரும்பாலும் சிதறிய நிலையில் அமைந்திருப்பதால், ஒவ்வொரு குடும்பத்தின் வீடுகளுக்கும் இடையில் கணிசமான தொலைவு காணப்படும்.

**சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள்:**

முன்னோர் வழிபாடு இவர்களின் ஆன்மீக வாழ்க்கையில் முக்கிய இடம் வகிக்கிறது. நெருப்பை புனிதமானதாகக் கருதி, தீய ஆவிகளிடமிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக தங்கள் வீடுகளில் நெருப்பு தொடர்ந்து எரியுமாறு வைத்திருக்கும் வழக்கமும் இங்குள்ளது.

இவர்களின் நம்பிக்கைகளில் ஆழமான இயற்கை வழிபாட்டு (Animistic) கூறுகள் காணப்படுகின்றன. குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் இயற்கை சார்ந்த பல்வேறு துன்பங்களுக்கு இயற்கை காரணிகளோடு, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளும் காரணம் என்று அவர்கள் நம்புகின்றனர். இவர்களின் கல்வியறிவு ஆண்கள் சுமார் 22%, பெண்கள் சுமார் 10% ஆகும்.

**சாதகமான சூழ்நிலைகள்:**

1. "சத்தீஸ்கரின் சிம்லா" என்று அழைக்கப்படும் அழகிய மலைப்பகுதி.
2. FMPB கடந்த 10 ஆண்டுகளாக இப்பகுதியில் பணியாற்றி வருகிறது. சீதாபூர் மற்றும் அம்பிகாபூர் பகுதிகளில் ஓராவன் சமூகத்தினரிடையேயும், மலை கோர்வா மக்களிடையேயும் மிஷனெரி பணிகள், விசுவாசிகள் மற்றும் சபை ஊழியம் நடைபெற்று வருகின்றன.
3. Wycliffe India Mission மூலம் புதிய ஏற்பாடு மற்றும் இயேசு திரைப்படம் (Jesus Film) கிடைக்கின்றன.

**ஜெபிப்போம்:**

- இம்மக்களிடையே பணியாற்றுவதற்காக பாரத்துடன் செல்ல கூடிய மிஷனெரிகளை கர்த்தர் எழுப்பிதர ஜெபிப்போம்.
- தீய ஆவிகள் பற்றிய பயம் நீங்கி, இயேசுவின் ஒளியால் அவர்களின் வாழ்வு நிரப்பப்பட ஜெபிப்போம்.
- பாதிப்புக்குள்ளாகக்கூடிய இம்மக்களிடையே கல்வியும், சமூக மேம்பாடும் ஏற்பட ஜெபிப்போம்.



PRAYER POINTS - FMPB FIELD - ஊழியக் களம்

Mr. Suriya Kumar

# ஸ்பெயின்

ஸ்பெயின் ஐரோப்பாவில் உள்ள ஒரு அழகான நாடாகும். இது பிரமிக்க வைக்கும் கலை மற்றும் கட்டிடக்கலை, செழுமையான உணவு கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்கள், கண்கவர் மத்திய தரைக்கடல் கடற்கரைகளுக்கும் பெயர் பெற்றது. இது வரலாறு, படைப்பாற்றல் மற்றும் உற்சாகமான கொண்டாட்டங்கள் நிறைந்த ஒரு தேசமாகும். இருப்பினும், மதச்சார்பற்றதாக (Secular) மாறிவரும் இந்த சமூகத்தில், ஸ்பெயினில் உள்ள பல இளைஞர்கள் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

| | |
|---|---|
| தலைநகரம் | : மாட்ரிட் |
| மொழி | : ஸ்பானிஷ் |
| அரசியல் அமைப்பு | : பாராளுமன்ற அரசியலமைப்பு முடியாட்சி |
| மக்கள் தொகை | : சுமார் 48 மில்லியன் |

**மதக் கண்ணோட்டம்:**

- ஸ்பெயின் மக்கள்தொகையில் சுமார் 60-65% பேர் தங்களை ரோமன் கத்தோலிக்கர்கள் என்று அடையாளப்படுத்திக்கொள்கிறார்கள். இருப்பினும் தேவாலயத்திற்குத் தவறாமல் செல்லும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது.
- மக்கள் தொகையில் ஏறத்தாழ 25-30% பேர் தங்களை நாத்திகர்கள் (Atheist) என அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இது ஐரோப்பாவின் மதச்சார்பின்மையைப் பிரதிபலிக்கிறது.

**சிறப்பு நிகழ்வுகள்:**

- ரோமன் கத்தோலிக்க திருச்சபை மற்றும் கிறிஸ்தவம் குறித்த சர்வதேச மாநாடு (ICRCCC) 2026, அக்டோபர் 1ஆம் தேதி ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனாவில் நடைபெறவுள்ளது. தேசிய கத்தோலிக்க இளைஞர் மாநாடு, மாட்ரிட்டிலும் நடைபெறவுள்ளது. 2026 அக்டோபரில் நடைபெறும் கத்தோலிக்க கிறிஸ்தவ நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும்.
- இந்தக் கூட்டங்கள், இளம் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களிடையே விசுவாச அடிப்படையிலான தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதோடு, பொது வாழ்வில் கத்தோலிக்கத் திருச்சபையின் செல்வாக்கு, அரசியல் ஈடுபாடு மற்றும் இளைஞர் செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல்களையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**ஸ்பெயினுக்கான ஜெபக் குறிப்புகள்:**

- *ஸ்பெயினில் வேலையின்மை:* ஸ்பெயினிலுள்ள பல இளைஞர்கள் வேலையின்மை மற்றும் வீட்டுவசதி நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். நிச்சயமற்ற இக்காலங்களில் வல்ல தேவன் அவர்களுக்குப் புகலிடமாக இருந்து, அவர்களின் அன்றாடத் தேவைகளைச் சந்திக்க ஜெபிப்போம்.
- *போதைப்பழக்கங்கள்:* ஏராளமான இளைஞர்கள் போதைப்பொருள் மற்றும் கொக்கைன் (Cocaine) பழக்கங்களால் தவிக்கிறார்கள். இயேசு, போதைப்பழக்கத்தின் சங்கிலிகளை உடைத்து, அவர்களின் இருதயம், மனம் மற்றும் ஆன்மாவை இவற்றிலிருந்து விடுவிக்க ஜெபிப்போம்.
- *இளைஞர்களிடையே எழுப்புதல்:* ஸ்பெயினில் மதச்சார்பின்மை மேலோங்கி இருப்பதால், இளைஞர்களின் இருதயங்கள் கிறிஸ்துவை ஊக்கத்துடன் தேடவும், அவர்கள் தங்கள் விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும், இயேசு இவர்களைப் பள்ளிகளிலும், பணியிடங்களிலும் தமது ஒளியைப் பிரகாசிக்கச் செய்யும் துணிச்சலான சாட்சிகளாக எழுப்பவும் ஜெபிப்போம்.

**"அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்" (எரேமியா 29:12).**



# பணித்தளக் கரிசனைகள்

**(மருத்துவ, சுகாதார நலத் திட்டப்பணிகள்)**






கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில், ஜனங்களுக்கு கடவுளுடைய இராஜ்யத்தின் செய்தியைக் கூறி, அவர்களுடைய ஆத்தும மீட்புக்கான பணியைச் செய்ததோடு, அவர் வியாதியஸ்தர்களையும், பிணியாளிகளையும் சுகப்படுத்தினதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். ஆத்துமத்திலே மட்டுமல்ல; சரீரத்திலும் ஜனங்கள் சுகமாயிருக்க இயேசு விரும்பினார். அதுமட்டுமல்ல, பிணியாளிகளை சொஸ்தமாக்கும்படிக்கு அவர் தன்னுடைய சீடர்களுக்கு வல்லமையையும், கட்டளையையும் கொடுத்ததை நாம் வேதத்தில் பார்க்கிறோம். நாம் நம்முடைய பணித்தள ஊழியங்களிலே ஆண்டவருடைய ராஜ்யத்தின் செய்தியைக் கூறி மனந்திரும்புதலுக்கு நேராக மக்களை வழிநடத்தும் மிஷனெரிகளுக்கு, சரீர பிரகாரமான பாடுகளிலிருந்து, வியாதிகளிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்வதோடு மட்டும் நாம் நின்றுவிடாதபடிக்கு, கடவுள் ஏற்படுத்தி தந்திருக்கின்ற மருத்துவத்துறை சார்ந்த பணிகளையும் மக்கள் மத்தியில் செய்து கொண்டு வருகிறோம். நம்முடைய பணித்தளங்களிலே நாம் ஒரு சில மருத்துவ சுகாதார நல திட்டங்களைச் செயல்படுத்தி வந்தாலும், தேவைகள் இன்னும் அதிகமாயிருப்பதை ஒவ்வொரு மாநிலங்களிலும் உணருகிறோம். எனவே மருத்துவ நலன் சார்ந்த திட்டப்பணிகள், ஊழியங்கள் இன்னும் நம்முடைய பணித்தள எல்லைகளிலே விரிவாய் பெருக நீங்கள் ஜெபிக்கும்படியாய் அன்பாய் வேண்டுகிறோம்.

**துதிக்க:**

- ✦ ஜார்கண்ட் மாநிலத்தில் நமது இயக்கத்தின் மூலமாக சாண்டிகோலாவில் நடத்தப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக தேவனைத் துதிப்போம்.
- ✦ நமது பணித்தள எல்லைகளிலே பிற சகோதர தொண்டு நிறுவனங்களின் மூலமாக செய்யப்படும் மருத்துவ மற்றும் சுகாதார நலத்திட்டப் பணிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:**

- ✦ தேவையுள்ள பிராந்தியங்களில் மருத்துவ நலத்திட்டங்களைத் துவங்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண...
- ✦ மருத்துவ, சுகாதார நலத்திட்டங்களைப் பணித்தளங்களில் நிறைவேற்ற தேவையான மருத்துவர்களையும், மருத்துவப் பணியாளர்களையும் தேவன் எழுப்பித்தர...
- ✦ மருத்துவ, சுகாதார நலத்திட்டங்களுக்கான நிதித் தேவைகள் தடையின்றி சந்திக்கப்பட...
- ✦ மருத்துவ மற்றும் சுகாதார நலத்திட்டங்களைத் துவங்கி நடத்த தேவையான அரசு அனுமதிகள், தடையில்லாச் சான்றுகள் கிடைக்கப்பெற...
- ✦ பணித்தளங்களில் மருத்துவ முகாம்களை நடத்த எடுக்கப்படும் முயற்சிகளைத் தேவன் வாய்க்கப்பண்ண...
- ✦ மிகவும் பின்தங்கிய பிராந்தியங்களில் வாழும் மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வு கொடுக்கப்பட்டு மக்கள் பயன்பெற...
- ✦ மருத்துவத்துறை சார்ந்தவர்கள் கலாச்சாரம் கடந்த மிஷனெரிப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, பாமர மக்களின் விடுதலைக்காக செயல்படுவதற்கு முன்வர...
- ✦ நமது மருத்துவமனை, நாம் நடத்தும் மருத்துவ முகாம்களில் பங்குபெறும் பிணியாளிகள் பூரண சுகம்பெற...
- ✦ பணித்தள கிராமங்களில் பல்வேறு வியாதிகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பூரண சுகமடைய...
- ✦ நமது பணித்தள பிராந்தியங்களிலுள்ள ஏழை, எளிய மக்களுக்கு தேவையான மருத்துவ, சுகாதார நலத்திட்டங்கள் விரிவான முறையில் ஆயத்தப்படுத்தப்பட்டு முறையாக நிறைவேற்றப்பட...
- ✦ பணித்தளங்களில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மருத்துவ சேவைப்பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களைத் தேவன் ஆசீர்வதித்து பாதுகாக்க...
- ✦ இந்தியாவில் தேவன் எழுப்பியுள்ள அனைத்து மிஷன் மருத்துவமனைகளையும் அவர் ஆசீர்வதித்து, திரளான மக்கள் இந்த பணியின் மூலம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

Dr. Godwin & Dr. Azubha

# திரை அடிமைத்தன நோய்க்குறி

(Screen Addiction Syndrome)




### என்ன?

திரை அடிமைத்தன நோய்க்குறி என்பது ஸ்மார்ட்போன்கள், டேப்லெட்டுகள், கணினிகள், கேமிங் சாதனங்கள் மற்றும் தொலைக்காட்சி போன்ற டிஜிட்டல் திரைகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இது ஒருவரின் தூக்கம், படிப்பு / வேலை, உறவுகள், உடற்பயிற்சி மற்றும் உணர்ச்சிப் பூர்வமான நல்வாழ்வைப் பாதிக்கக்கூடும்.

### ஏன்?

ஸ்மார்ட்போன்களை எளிதாக அணுக முடிவது, சமூக ஊடகங்கள், கேம்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் உடனடியாகக் கிடைக்கும் மகிழ்ச்சி, அடிக்கடி வரும் அறிவிப்புகள் (வாட்ஸ்அப், ஸ்னாப்சாட், இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக்), சலிப்பு, தனிமை, மன அழுத்தம் அல்லது பதற்றம் மற்றும் திரை நேரத்தில் தெளிவான வரம்புகள் இல்லாதது ஆகியவற்றால் திரை அடிமைத்தனம் உருவாகலாம்.

### எப்படி?

திரை நேரத்தைக் குறைப்பதில் சிரமம், இணையதளமற்ற (ஆஃப்லைன்) செயல்பாடுகளில் ஆர்வம் இழப்பது, போதிய கவனமின்மை, சாதனங்களைப் பயன்படுத்தி நள்ளிரவு வரை விழித்திருப்பது, சாதனங்கள்/ஸ்மார்ட்போன்கள்/தொலைக்காட்சியைப் பயன்படுத்த முடியாதபோது எரிச்சல் அடைவது, குறைந்த உடற்பயிற்சி மற்றும் நேரடி உரையாடல்கள் குறைவது போன்றவை திரை அடிமைத்தனத்தின் பொதுவான அறிகுறிகளாகும்.

### புள்ளிவிவரங்கள்:

1. 2025ஆம் ஆண்டில், 85.5% இந்தியக் குடும்பங்கள் குறைந்தபட்சம் ஒரு ஸ்மார்ட்போனையாவது வைத்துள்ளனர்.
2. 70,000க்கும் மேற்பட்ட நகர்ப்புற இந்தியப் பெற்றோர்களிடம் எடுக்கப்பட்ட 2024ஆம் ஆண்டு ஆய்வில், 66% பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் ஆன்லைன் கேம்கள், வீடியோக்கள் அல்லது சமூக ஊடகங்களுக்கு அடிமையாகி உள்ளதாகக் கூறியுள்ளனர். மேலும் 58% பெற்றோர்கள் வழக்கமான திரைப்பயன்பாட்டிற்குப் பிறகு தங்கள் குழந்தைகளிடம் அதிக ஆக்ரோஷம் அல்லது பொறுமையின்மையைக் கவனித்துள்ளனர்.
3. 2024 பாட்டு டெக் (Baatu Tech) ஆய்வில் பங்கெடுத்த 95% இந்தியப் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் திரை அடிமைத்தனம் குறித்து ஆழ்ந்தக் கவலையைத் தெரிவித்துள்ளனர்.
4. ASER 2024 ஆய்வின்படி, கிராமப்புற இந்தியாவில் 14-16 வயதுடைய டீனேஜர்களில் 89.1% பேருக்கு வீட்டில் ஸ்மார்ட்போன் வசதி உள்ளது. அவர்களில் 57% மட்டுமே ஸ்மார்ட்போன்களைக் கல்விக்காகப் பயன்படுத்துகின்றனர், அதே வேளையில் 76% பேர் சமூக ஊடகங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர்.
5. இந்தியக் குழந்தைகள் தங்கள் முதல் ஸ்மார்ட்போனைப் பெறும் வயது குறைந்துக்கொண்டே வருகிறது. நகர்ப்புறக் குடும்பங்களிலுள்ள பல குழந்தைகள் 9 முதல் 12 வயதிற்குள்ளேயே ஸ்மார்ட்போனை உபயோகப்படுத்துகிறார்கள்.
6. இந்தியாவில் 3% மக்கள் மட்டுமே தொழில்நுட்பத்துடன் ஆரோக்கியமான உறவைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

"மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோ. 3:2)

### ஜெபக்குறிப்புகள்:

1. இளைஞர்கள் தொழில்நுட்பத்தை ஆரோக்கியமான மற்றும் சீரான முறையில் பயன்படுத்த ஞானமும், சுயக்கட்டுப்பாடும் பெற ஜெபியுங்கள்.
2. அளவுக்கு அதிகமான திரைப் பயன்பாட்டினால் இளைஞர்களிடையே அதிகரிக்கும் பதற்றம், தனிமை, ஒப்பீடு, கவனச்சிதறல் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் நீங்க ஜெபியுங்கள்.
3. திரைப் பயன்பாடு என்பது பெற்றோர், உடன்பிறந்தவர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் மற்றும் திருச்சபை ஐக்கியத்துடனான அர்த்தமுள்ள உறவுகள் அழிந்துவிடாதபடியிருக்க ஜெபியுங்கள்.
4. இளைஞர்களின் மனம், மதிப்புகள் அல்லது விசுவாசத்தைப் பாதிக்கும் தகவல்கள், ஆன்லைன் தொடர்புகள் மற்றும் செல்வாக்குகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்க ஜெபியுங்கள்.
5. தொழில்நுட்பத்தைச் சுற்றி ஆரோக்கியமான வரம்புகளை நிர்ணயிப்பதில் பெற்றோருக்கு ஞானம், பொறுமை கிடைக்க ஜெபியுங்கள்.
6. இளைஞர்கள் இடைவிடாத ஸ்க்ரோலிங்கை (scrolling) விடக் கடவுளோடு நேரத்தைச் செலவிடத் தேர்ந்தெடுக்கவும், அவருடைய வார்த்தை அவர்களின் எண்ணங்களையும், தேர்வுகளையும் வடிவமைக்கவும் ஜெபியுங்கள்.

சிதைந்த சமூகத்தை சீர்படுத்திய அருட்பணியாளர்

# ஓர் இனிய உரையாடல்

## Rev. P. ராஜதுரை



**அருட்பணியாளரின் அறிமுகம்:** என் சொந்த ஊர் கூடங்குளம் திருநெல்வேலி மாவட்டம். 1957ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதி திரு. பேரின்பநாயகம் & திருமதி. அமிர்தம் அவர்களுக்கு 6வது மகனாகப் பிறந்தேன். என் தகப்பனார் என் தாயைத் திருமணம் செய்வதற்காகவே கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொண்டார். என் தாய்க்கு 4 பெண் பிள்ளைகளுக்கு பின்பு ஜெபத்தால் நானும் என் அண்ணனும் பிறந்தோம். என் தாய் என்னை மிகவும் நேசித்து கிறிஸ்தவ குடும்ப வளர்ப்பில் என்னை வளர்த்தார்கள். ஆலயத்திற்கு ஒழுங்காய் செல்வது, ஆலயத்தின் பாடற்குழுவில் இருப்பது, ஆலயத்தாருடன் ஊழியங்களுக்கு செல்வது போன்ற காரியங்களில் வளர்க்கப்பட்டேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் இரட்சிப்பு எப்பொழுது ஏற்பட்டது?**

**அருட்பணியாளரின் பதில்:** பாளையங்கோட்டையில் ஜனவரி 24ஆம் தேதி 1978ஆம் ஆண்டு Pastor.Rajendren கன்வென்ஷன் கூட்டமொன்று பாளை மார்க்கெட் மைதானத்தில் நடந்தபோது, அக்கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். அங்கு ஜெப வேளையின்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் முன் அழுது கொண்டு நிற்கிறார். உன் மாய வாழ்க்கையைப் பார்த்து உனக்காக கண்ணீர் வடிக்கிறார். அவருக்கு விரோதமான வாழ்க்கையை நீ வாழ்ந்தும் கூட, அவர் உன்னை நேசிக்கிறார். நீ மனம் திரும்ப வேண்டுமென்று உனக்காக அழுகிறார் என்று கூறினார். இந்த வார்த்தைகள் என் வாழ்வை இயேசுவுக்காய் அர்ப்பணிக்க வழிநடத்தியது. அன்றிலிருந்து என் பழைய வாழ்க்கை மாறியது. நான் புது சிருஷ்டியானேன்.

**கேள்வி: ஊழிய பாரம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? அப்பொழுது பெற்றோரின் மனநிலை என்ன?**

**அருட்பணியாளரின் பதில்::** ஒரு நாள் மத்தியானம் நான் எசேக்கியேல் 2ஆம் அதிகாரத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது, அதில் 5ஆம் வசனத்தில் தீர்க்கதரிசி ஊழியம் என்று எனக்கு அழைப்பு கொடுத்தார். எனவே வேலையை வேண்டாம் என்று விட்டுவிட்டு வீட்டிற்கு சென்றேன். எங்கள் வீட்டில் திருமணமாகாமல் 2 மூத்த சகோதரிகள் இருந்தனர். என் பெற்றோர்கள் 70 வயதைத் தாண்டினவர்கள். அவர்கள் என்னைத்தான் தங்கள் எதிர்காலத்தில் காப்பாற்றுவான் என்று நம்பியிருந்தனர். நான் வட இந்தியாவிற்கு ஊழியம் செய்ய செல்கிறேன். இனிமேல் நான் உங்களுக்கு உதவ முடியாத நிலையிலிருக்கிறேன் என்று சொன்னதும் எனது 2 மூத்த சகோதரிகளும், என் பெற்றோரும் தங்கள் எதிர்காலத்தை நினைத்து அழ ஆரம்பித்துவிட்டனர். ஆனால் என் தாயாரோ என்னிடம் எனக்கு ஆண் பிள்ளை வேண்டுமென்று ஜெபித்தபோது கர்த்தர் உன்னையும், உன் அண்ணனையும் கொடுத்து என் நிந்தையை நீக்கினார். ஆனால் கர்த்தர் உன் அண்ணனை 12 வயதில் உயிரோடு எடுத்துக்கொண்டார். இப்போது அவர் உன்னையும் தம் ஊழியத்திற்காக அழைக்கிறார், என் நிந்தை நீக்கின கர்த்தருக்கு உன்னை நான் சந்தோஷமாய் ஒப்புக்கொடுக்கிறேன் என்று என்னை ஊழியத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

**கேள்வி: FMPB ஊழியத்தில் எப்படி இணைந்தீர்கள்?**

**அருட்பணியாளர் பதில்:** கிறிஸ்துவுக்கு என்னை அர்ப்பணித்து free timeஇல் ஊழியம் செய்தபோது எனக்கு தெரிந்த ஒருவர், உன் எதிர்கால ஊழியத்தைக் குறித்து உன் திட்டம் என்ன என்று கேட்டார். மேலும் நீ ஊழியத்திற்கு செல்ல விரும்பினால் பாளையங்கோட்டையில் FMPB Promotional Office இருக்கிறது, நான் உன்னை அங்கு அழைத்துச்சென்று அறிமுகப்படுத்துகிறேன் என்று சொல்லி, என்னைக் கூட்டிச்சென்று திரு. துரைசிங் அண்ணன் மற்றும் திரு. இஸ்ரவேல் அண்ணனிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள். இந்த அண்ணன்மார்கள் மூலம் FMPB ஊழியங்களைப் பற்றி அறிந்து, என்னையும் வட இந்தியா ஊழியத்திற்கு அர்ப்பணித்து 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் தேதி FMPB ஊழியத்தில் இணைந்தேன்.

**கேள்வி: மிஷனெரி ஊழியத்தில் நீங்கள் சந்தித்த சவால்கள் மற்றும் விளைவுகள் என்ன?**

**அருட்பணியாளர் பதில்:** 1981ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து மத்திய பிரதேசத்தில் ஜோபத் பணித்தளத்தில் ஏழு வருடம் பணி செய்தேன். ஆனால் ஏழு வருடமும் யாரும் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. 1987 மே மாதம் எங்கள் திருமணம் நடைபெற்றது. 1988ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எங்கள் மூத்த மகன் நான்கு மாதமாக இருக்கும்போது குஜராத் மாநிலம் பரோடா மாவட்டம், Chhota Udaipur தாலுக்கா, Kawant blockயை மையமாக வைத்து விந்திய மலையில் நர்மதை ஆற்றின் கரையில் பணியை ஆரம்பித்தோம் .

Kawant வந்த பின்பும் இரண்டு வருடங்கள் கனிகளே இல்லை. எனவே நானும் என் மனைவி பத்சேபாளும் 2 நாள் உபவாசம் செய்து ஜெபித்தோம். அப்பொழுது கர்த்தர் எங்களுக்கு லூக்கா 5:4ஆம் வசனத்தின் மூலம் ஆழத்தில் கொண்டு போய் வலையை போடுங்கள் என்று கூறினார். அதன்படி கவாண்டிலிருந்து 13 கிலோமீட்டர் தூரத்தில் Ambadungar என்னும் கிராமம் உள்ளது. இது அப்பகுதியிலேயே 4000 மீட்டர் உயரத்திலுள்ள மலையிலிருக்கிறது. அங்கு ரூங்ராபீல் மக்கள் 1,25,000 பேர் இருக்கிறார்கள். இவர்கள் நர்மதா நதிக்கரையிலுள்ள மலைகளில் வசிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு சென்றோம். இந்த கிராமத்தின் பஞ்சாயத்து தலைவரை சந்தித்து சுவிசேஷம் அறிவித்தோம். அவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டு வாரம் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு பஜன் நடத்த சொன்னார். அதன்படி ஒவ்வொரு ஞாயிறும் அவர் வீட்டில் பஜன் நடத்தினோம். 18 வருடம் அசுத்த ஆவியினால் அலக்கழிப்பட்டு வியாதியாயிருந்த அவருடைய மனைவி ஜெபத்தின் மூலம் சுகம் அடைந்தார்.

இப்படி ஆரம்பிக்கப்பட்ட ஊழியத்தின் விளைவாக 12 ஆயிரம் ஆத்துமாக்கள் அப்பகுதியில் இருந்தார்கள். ஹாஸ்டலில் 100 பிள்ளைகள் படிக்க கிருபை செய்தார்

**கேள்வி: கேரீத் வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**அருட்பணியாளர் பதில்:** கர்த்தர் என்னை அழைத்தபோது என் பெற்றோர் மற்றும் இரண்டு சகோதரிகளை நடுத்தெருவில் விட்டு சென்றது போல இருந்தது. ஆனால் கர்த்தர் வாக்கு கொடுத்தபடி என் சகோதரிகளுக்கு நல்ல முறையில் திருமணம் நடைபெறவும், என் பெற்றோர்களுக்கு எந்த குறைவும் இல்லாமலும் வழிநடத்தினார். அன்று நான் என் பெற்றோர்களையும் சகோதரிகளையும் மட்டுமே கவனித்திருந்தால், இன்று இந்த 12000 பேரும் இருளுக்குள் இருந்திருப்பார்கள். மாற்கு 10:29, 30ஆம் வசனத்தின்படி கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். மற்றவர்களும் நம் மூலம் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

**ஜெபக்குறிப்புகள்:**

- ✦ இயேசுவை ஏற்றுக்கொண்ட டூங்ராபீல் விசுவாசிகள், தங்களது விசுவாசத்தில் நிலைத்திருந்து சாட்சியாக வாழ
- ✦ ஹாஸ்டலில் தங்கி படித்து வருகிற பிள்ளைகளின் ஞானத்திற்காக, ஆவிக்குரிய வாழ்க்கைக்காக
- ✦ Rev. ராஜதுரை அண்ணனின் ஊழியங்களுக்காக, அவர்களது பிள்ளைகளின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

Mrs. Jeba Saral

# Sleep Divorce



Hello All, கடந்த மாதம் 'Prodigal mate'டைக் குறித்துப் பார்த்தோம், ஜெபித்தோம்! இந்த மாதமும் ஸ்லீப் டிவோர்ஸ் (Sleep Divorce) என்ற தலைப்பில் இருக்கும் விஷயங்களையும், அதன் அடிப்படையிலான ஜெபக்குறிப்புகளையும் படித்து, தேவனிடம் மன்றாடுவோம். இந்த ஸ்லீப் டிவோசை குறித்து சமூக வலைத்தளங்களில் பற்பல விதமான தகவல்கள் இருப்பினும், வாலிபப் பிராயத்தில் காணப்படும் ஸ்லீப் டிவோர்ஸைக் குறித்துப் பார்ப்போம். நாம் தூக்கத்தின் முக்கியத்துவத்தை பல நேரங்களில் அறிவதில்லை!! ஒருவேளை நாம் தூக்கத்தை தவிர்த்தால் கூட, அதை மறு வேளை இன்னும் அதிக நேரம் தூங்கி சரி செய்துக் கொள்கிறோம். இப்படியே நாம் பல நாட்கள் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறோம். பின்னர் அது ஒரு பழக்கமாகவே மாறுகிறது. இதனால் நம்மை அறியாமலேயே நம்முடைய தினசரி வாழ்க்கை முறை மாறி விடுகிறது. எந்த ஒரு பழக்கத்தின் விளைவுகள், அது முதிர்ச்சியாகும் போது தான் தெரியும் .அவ்வாறுதான் friends, இந்த sleep divorceசும்!! நாம் நம்முடைய தூக்கத்தை, தூங்கும் வேளையில் தவிர்த்து, அந்நேரங்களில் படிக்கிறோம். நம்முடைய நண்பர்களிடம் whatsapp, instaவில் பேசுகிறோம். அல்லது செல்போனில் பல விளையாட்டுகளை விரும்பி பல மணி நேரம் விளையாடுகிறோம். மேலும் இந்நேரங்களில், எவ்வித இடையூறும் இல்லாமல் நாம் நம்முடைய காரியங்களைச் செய்ய முடிகிறது, நம்முடைய முழு கவனத்தையும் நம்மால் செலுத்த முடிகிறது. இது நம்முடையக் கண்களுக்கு ஒரு புத்திசாலித்தனமான, பிரகாசமுள்ள ஒரு லைட் பல்பாகத்தான் தோன்றுகிறது. சரி நீ இரவில் உன் வேலைகளை எல்லாம் செய்கிறாய், பின்னர் உன் வேலைகளை முடித்து விட்டோம்! என்ற திருப்தியோடு, உறங்கச் செல்கிறாய். காலையில் இதனால் நீ லேட்டாக தான் எழும்ப முடிகிறது. அதனால் வேதம் வாசிப்பதையும், ஜெபிப்பதையும் பல நேரங்களில் தவிர்த்து அல்லது ஐந்து நிமிடங்களுக்குள் சுருக்கி, பின்னர் நம்முடைய தினசரி வேலைகளில் நாம் இறங்கி விடுகிறோம்!! காரியத்தின் கடைத்தொகை என்னவென்றால், நம்மைப் படைத்த தேவனுக்கு ஐந்து நிமிடமும், அதைவிட எவ்வளவோ மடங்கு குறைந்த மதிப்பிலே இருக்கும் சொற்ப வேலைக்கு பல மணி நேரங்களையும் நாம் ஒதுக்கி வைக்கிறோம்!! **"காலைதோறும் அவருடைய கிருபைகள் புதியதாய் இருக்கிறது"** [புல. 3:23]. **"அதிகாலையிலேயே என்னை தேடுவோர் என்னை கண்டடைவார்கள்"** [நீதி. 8:17], அதிகாலையில்...... உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும் (சங். 119:147-148). என்னுடைய தனிப்பட்டக் கருத்து என்னவேனில், இரவில் நாம் வேலைப் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருந்தால், நம் வேலைகளைச் செய்து விட்டு, பின்னர் வேதம் வாசித்து, ஜெபித்து உறங்கச் செல்லலாம். அடுத்ததாக மற்றொரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்கள் தூங்கியே தங்கள் நேரத்தை கழிக்கிறார்கள். தூக்கத்தினால் தங்களுடைய வேலை, படிப்பு, வீட்டு பாடங்கள் போன்றவற்றை அவர்களால் செய்ய முடிவதில்லை. குறித்த நேரத்துக்கு பலக் காரியங்களை அவர்களால் செயல்படுத்த முடியவில்லை. விளைவு, தங்கள் வாழ்க்கையில் **'தோல்வியுற்றவர்கள்'** என்ற மனநிலையைப் பெறுகின்றனர். **"தூக்கத்தை விரும்பாதே விரும்பினால் தரித்திரனாவாய்"** [நீதி. 20:13].

தூக்கம் என்பது வீணாகும் நேரமல்ல; அது உடல் வளர்ச்சி, கற்றல், நினைவாற்றல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மனநலத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்!!

## ஜெபக்குறிப்புகள்:

- தூங்கவிடாமல் வாலிபர்களைப் பலவிதமான அடிமைதனத்துக்குள் வைத்திருக்கும் அந்தகார மற்றும் மனுஷீக வல்லமைகள் முறியடிக்கப்பட ஜெபிப்போம்.
- தூக்கமின்மையினால் ஏற்படும் எரிச்சல், மனசோர்வு, Depression, Harmonal imbalance ஆகியவற்றிலிருந்து வாலிபர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.
- வாலிபப் பிராயத்தில் தூக்கமின்மையின் விளைவுகளான உடல் பருமன், டைப் 2 நீரிழிவு, இருதயம், நரம்பு சம்பந்தமான பிரச்சினைகள் ஆகியவற்றின் விளைவுகளை உணர்ந்து வாலிபர்கள் செயல்பட ஜெபிப்போம்.
- மன அழுத்தத்தைப் போக்க ரீல்சை பார்த்து, பின்னர் அதில் இருக்கும் காரியங்களினாலும், "நேரத்தை கடத்தி விட்டோமே" என்கிற குற்ற உணர்ச்சியினாலும், மறுபடியும் மன அழுத்தத்திற்கே தள்ளப்படும் வாலிபர்களின் இவ்வகையான கொடியச் சுழற்சியிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.
- இரவு பல மணி நேரம் தன் ஆண் அல்லது பெண் நண்பரிடம், பெற்றோருக்குத் தெரியாமல் பேசிக்கொண்டும், மொபைல் games விளையாடிக் கொண்டிருந்தும், தவறான வலைதளங்களைப் பார்த்துக் கொண்டிருந்தும், பின்னர் காலையில் தங்களை எழுப்பும் பெற்றோரிடம், எரிச்சல் பட்டு, சண்டையிடும் வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்களுக்காகப் பாரத்தோடு ஜெபிப்போம்.
- தொழில்நுட்பம், கல்வி தேர்வுகள் மற்றும் பயிற்சிகளின் பாரத்தினால் இராமுழுதும் படித்து தங்கள் உடல் நிலையைப் பாதிப்புக்குள்ளாக்கும் வாலிபர்களுக்காக ஜெபிப்போம்.
- நீதிமொழிகள் 31ஆம் அதிகாரத்தில் வரும் "குணசாலியான ஸ்திரீ"யை போல, வாலிப மற்றும் இளம் வாலிப பெண்கள், அதிகாலையில் எழும்பும் பழக்கத்தைப் பெற்று, குணசாலியான ஸ்தீரிகளாய்த் திகழ ஜெபிப்போம்.
- அதிகாலையில் எழுந்து வேதம் வாசித்து, ஜெபிக்கும் வாஞ்சையைத் தேவன் ஒவ்வொரு வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்களிடம் விதைக்க நாம் முழங்காலில் நின்று ஜெபிப்போம்.

# மொழிபெயர்ப்பு பணிகளுக்காக...

நமது பணித்தளங்களில் விசுவாசிகள் தங்கள் சொந்த மொழிகளில் வேத வசனங்களை வாசிப்பதற்காக எழுத்து வடிவமற்ற 14 மொழிகளில் நமது ஊழியர்கள் வேத புத்தகத்தை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். மொழிபெயர்ப்புப் பணிகளைச் செய்துவரும் நம் ஊழியர்களுக்காக நாம் தேவ சமூகத்தில் மன்றாடுவோம்.

| | மொழிகள் | ஊழியர்கள் |
|---|---|---|
| 1 | வார்லி நிஹ்ரி | திரு. G. ஆபிரகாம் குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 2 | வார்லி டோக்ரி | திரு. G. ஆபிரகாம் குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 3 | வார்லி டவாரி | திரு. G. ஆபிரகாம் குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது |
| 4 | சௌத்ரி | திரு. கிறிஸ்டோபர் தாமஸ் குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 5 | ஹரியான்வி | திரு. சுதர்சன் தாமஸ் குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது |
| 6 | குளுக்ஸ் | திரு. தாமஸ் குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 7 | காந்தேஷி பீலி | (ஊழியர் இல்லை)<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 8 | டூங்ரா பீல் | திரு. சுனில் மேத்யூ குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 9 | பாவ்ரி | திருமதி. ஜேன் இம்மானுவேல்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 10 | வசாவி ஆம்பூரி | திரு. ராஜேந்திரன்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 11 | வசாவி டேவாலி | திரு. ராஜேந்திரன்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 12 | வசாவி காந்தேசி | திரு. ராஜேந்திரன்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 13 | மால்தோ சௌரியா | திரு. ஜார்ஜ் எட்வர்ட் குடும்பம்<br>முழு வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது |
| 14 | குமார் பஹாடியா | திரு. ஜார்ஜ் எட்வர்ட் குடும்பம்<br>புதிய ஏற்பாடு மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது |

**ஜெபக்குறிப்புகள்:**

- ♣ மொழிபெயர்ப்புப் பணியில் உதவி செய்து வரும் உதவியாளர்களுக்காகவும், மொழிபெயர்ப்புப் பணிகள் தடையின்றித் தொடரப்படவும் ஜெபிப்போம்.
- ♣ ஊழியர்களின் சரீர சுகம் மற்றும் பெலனுக்காகவும், மொழிபெயர்ப்புப் பணிகள் தடையில்லாமல் நடைபெறவும், முடிக்கப்படாத மற்ற புத்தகங்களின் மொழிபெயர்ப்புப் பணிகள் விரைவில் முடிக்கப்படவும் ஜெபிப்போம்.
- ♣ மொழிபெயர்க்கப்பட்டுள்ள புத்தகங்களை சரிபார்க்கும், மொழிபெயர்ப்பு சரிபார்ப்புக் குழுவிலுள்ள அனைவருக்கும் தெய்வீக ஞானம், கிருபை, சரீர சுகம் தொடர்ந்து அருளப்படவும் ஜெபிப்போம்.
- ♣ அனைத்து மொழிகளிலும் முழு வேதாகமமும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுவதற்கு தேவன் தமது ஒத்தாசையைக் கொடுக்கவும் ஜெபிப்போம்.
- ♣ வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களை விசுவாசிகள் மற்றும் பிற மக்களும் ஆர்வத்துடன் வாங்கி, வாசித்து, விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

PRAYER POINTS - வாசலுக்கு வெளியே

Ms. Wiselin

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...



## EXPENSIVE BABIES

கர்த்தர் தந்த கர்ப்பத்தின் கனியைப் பெற்றெடுப்பதை இன்றைய மருத்துவதுறையானது பணம் சம்பாதிக்கும் ஒன்றாக மாற்றியுள்ளது. இதனால் பெற்றோர்கள் தேவையில்லாத மருத்துவச் செலவுகளால் சுரண்டப்படுவதோடு, குடும்பத்தின் நிதியும் உறிஞ்சப்படுகிறது.

- மருத்துவத்துறையானது எக்காலத்திலும் உண்மையாக நடந்துகொள்ளவும், வாழ்க்கையின் மிகவும் முக்கியமான தருணங்களில் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் நிதி ரீதியாகச் சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

## BRICS

இந்த உயர்மட்ட உச்சிமாநாடுகள் புல்லட் புரூஃப் பாதுகாப்பு மற்றும் ஆடம்பரத்திற்காக பெருமளவிலான நிதியை விரயம் செய்யும் அதே வேளையில், சாதாரண குடிமக்கள் பயனற்ற அறிக்கைகளுக்காக லட்சக்கணக்கான டாலர் செலவை சுமக்கின்றனர்.

- தலைவர்கள் வெறும் அரசியல் கூட்டணிகளை மட்டும் உருவாக்காமல், உண்மையான அமைதி, வெளிப்படைத்தன்மை மற்றும் அன்றாட மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் கொள்கைகளைப் பின்பற்ற ஜெபிப்போம்.







## ROOMATES UPDATE

பாரம்பரிய எல்லைகளைச் சீர்குலைப்பது மட்டுமின்றி, கட்டுப்பாடற்ற ஆண்-பெண் இணைந்து வாழும் PGகளின் வணிகமயமாக்கல் கடுமையான பாதுகாப்பு அபாயங்கள், ஒழுங்குமுறையற்ற சூழல், கட்டுப்பாடற்ற நண்பர்களின் அழுத்தம் மற்றும் தனிப்பட்ட பொறுப்புக்கூறலின் முழுமையான வீழ்ச்சிக்கு வழிவகுக்கிறது.

- இளைஞர்கள் தங்களது இருதயத்தை பரிசுத்தமாய் பாதுகாத்துக்கொள்ளவும், மறைந்திருக்கும் ஆபத்துகளைப் புரிந்துகொண்டு தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் ஞானத்தை கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கவும் ஜெபிப்போம்.



## PLASTIC PROFITS, POISONED POCKETS

சிறந்த இளம் சிந்தனையாளர்கள் மக்கும் பிளாஸ்டிக்குகளைக் கண்டுபிடிக்க சிறிய மானியங்களைப் பெறும்போது, பல பில்லியன் டாலர் தொழில்துறைகள் எண்ணூர் போன்ற நச்சு மண்டலங்களைக் கண்டுக்கொள்ளாமல் இருக்கின்றன. அங்குள்ள பெருநிறுவனங்களின் பேராசையும் கட்டுப்பாடற்ற நுகர்வோர் கலாச்சாரமும் கடல் வாழ் உயிரினங்களை மூச்சுத்திணறச் செய்வதோடு, இளம் குழந்தைகளை நாள்பட்ட ஆஸ்துமாவால் அவதிப்பட வைக்கின்றன.

- அழிவை ஏற்படுத்தும் பேராசை மற்றும் நுகர்வு கலாச்சாரத்தின் பிடியை உடைக்கவும், அப்பாவியான வனவிலங்குகளைப் பாதுகாக்கவும், நச்சுத்தன்மையுள்ள மாசுபாட்டால் அவதிப்படும் சிறு குழந்தைகள் குணப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.





## FATAL SOCIAL ADDICTION

கடுமையான சமூக ஊடக அடிமைத்தனத்தால், ரீல்ஸ் (Reels) தொடர்பான தகராறில் ஒரு பெண் தன் கணவரால் கொடூரமாகக் கொல்லப்பட்டார்; மற்றொருவர் இணையத் தடையால் தனது வீடியோ இயக்கம் நின்றதால் சோகமாகி தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

- இளைஞர்கள் ரீல்ஸ், சமூக ஊடகப் புகழ் மற்றும் 'லைக்குகள்' மீது அளவுக்கு அதிகமான மோகம் கொள்ளாமல், தங்கள் நேரத்தையும், திறமையையும் அர்த்தமுள்ள மற்றும் நேர்மறையான வழியில் பயன்படுத்தும் ஞானத்தையும், சுயக்கட்டுப்பாட்டையும் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.



# எபேசுவில் பவுலின் வைராக்கியம்

MR. ISRAEL NATHANIEL EDWARD





கடந்த மாதம், ஒழுக்கக்கேடும், பாவமும் நிறைந்த ஒரு நகரத்தில் தேவன் பவுலைப் பயன்படுத்திய விதத்தைப் பார்த்தோம். பாவம் மற்றும் சீரழிவின் சேற்றிலிருந்து தேவன் தாம் தேர்ந்தெடுத்தவர்களை மீட்டெடுத்து, பாதாளத்தின் வாசல்களாலும் மேற்கொள்ள முடியாத ஒரு திருச்சபையை உருவாக்கினார். இந்த மாதம், கொரிந்துவைவிடப் பெரிய நகரமான எபேசுவில் தேவன் பவுலைப் பயன்படுத்திய விதத்தைப் பார்க்கப்போகிறோம். முற்றிலும் உள்ளூர் மக்களால் முன்னெடுக்கப்படும் ஒரு திருச்சபை வளர்ச்சி இயக்கத்தை உருவாக்கக்கூடிய காரணிகள் எவை என்பதை இந்த வேத ஆராய்ச்சியின் மூலம் புரிந்துகொள்வோம்.

**எபேசு நகரம்:**

எபேசு ஆசியா மாகாணத்தில் அமைந்திருந்தது. ரோமப்பேரரசின் கிழக்குப் பகுதிகளுக்குச் செல்லும் மிக நேரடியான கடல் மற்றும் தரைவழிப் பாதையில் அது அமைந்திருந்ததால், அக்கால உலகின் மிகப்பெரிய வணிக மையமாக விளங்கியது. சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா, கொலோசெ, எராப்போலி, அப்பமேயா போன்ற பல முக்கிய நகரங்கள் அதன் அருகில் இருந்தன. ரோமின் அதிகாரமும், கிரேக்கக் கலாச்சாரத்தின் சிறப்பும், கிழக்கத்திய மூடநம்பிக்கைகளும் மந்திரவாதமும் இங்கு முழுமையாகக் காணப்பட்டன. உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட தியானாளின் ஆலயமும் இங்கே இருந்தது.

**எபேசுவில் பவுலின் ஊழியம்:**

பவுல் தனது இரண்டாவது மிஷனெரி பயணத்தின் முடிவில் சிறிது காலம் எபேசுவுக்குச் சென்றிருந்தார் (அப். 18:19-21). பவுல் அங்கிருந்து புறப்பட்ட பின்னரும் பிரிஸ்கில்லாளும், ஆக்கில்லாவும் அங்கேயே தங்கி, யூதர்களுடன் கர்த்தருடைய வழியைப் பற்றி தொடர்ந்து பேசினர். அதன்பின், வேதவசனங்களை நன்கு அறிந்த கல்விமான் அப்பொல்லோ, இயேசுவைப் பற்றி துல்லியமாகப் போதித்தார் (அப். 18:24-26). ஆகவே, பவுல் தனது மூன்றாவது மிஷனெரிப் பயணத்தின்போது எபேசுவுக்குத் திரும்பி வந்தபோது, விரிவான ஊழியத்திற்கான அடித்தளம் ஏற்கனவே ஆயத்தமாக இருந்தது.

வழக்கம்போல பவுல் முதலில் யூதர்களிடையே தனது ஊழியத்தைத் தொடங்கினார். மூன்று மாதங்கள் ஜெபஆலயத்தில் தைரியமாகப் பேசி, தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி வாதாடியும், நம்பத்தக்க விதத்தில் எடுத்துரைத்தும் வந்தார் (அப். 19:8). அவர்களில் சிலர் நம்ப மறுத்ததோடு, “இந்த வழியை” பொதுமக்கள் முன்னிலையில் இழிவுபடுத்தத் தொடங்கியபோது, பவுல் சீஷர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, திறன்னுவின் விரிவுரை மண்டபத்தில் தினந்தோறும் கலந்துரையாடினார். வீடுகளில் நடைபெற்ற சிறிய கூட்டங்களிலும் மக்களுக்குப் பயனுள்ள அனைத்தையும் போதித்தார்.

யூதர்களின் சதித்திட்டங்களால் கடுமையாகச் சோதிக்கப்பட்டபோதிலும், கண்ணீருடன் விடாமுயற்சியோடு தொடர்ந்து செயல்பட்டார். யூதர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் தேவனை நோக்கி மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவின் மீது விசுவாசம் வைக்க வேண்டும் என்று மிகுந்த வைராக்கியத்துடன் அறிவித்தார். எபேசுவிலிருந்த இந்தச் சிறிய சபைகளுக்கு மூப்பர்களையும் அவர் நியமித்தார் (அப். 20:17-21). இது இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. இதன் விளைவாக, எபேசுவிலிருந்த விசுவாசிகள் அருகிலிருந்த நகரங்களுக்கும், கிராமப்புறங்களுக்கும் சென்று, கிறிஸ்துவை விசுவாசிக்கும் சபைகளை நிறுவினர். அவர்களால் நிறுவப்பட்ட சபைகளும் தங்களைச் சுற்றியிருந்த பகுதிகளில் இதேபோன்ற சபைகளை நிறுவின. இதன் மூலம் ஒரு திருச்சபை நாட்டும் இயக்கம் (Church Planting Movement) உருவானது. இதன் விளைவாக, ஆசியா மாகாணத்தில் வாழ்ந்த சுமார் 1.5 கோடி யூதர்களும் கிரேக்கர்களும் குறுகிய காலமான இரண்டு ஆண்டுகளுக்குள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டனர் (அப். 19:9-10).

**அற்புதமான செயல்களின் மூலம் தேவன் தமது செய்தியை உறுதிப்படுத்தினார்:**

தேவன் அசாதாரணமான செயல்களின் மூலம் தமது செய்தியை உறுதிப்படுத்தினார். பவுலின் மூலம் அசாதாரணமான அற்புதங்கள் நிகழ்ந்தன. பவுல் தொட்ட கைக்குட்டைகளும், இடைக்கச்சைகளும் நோயாளிகளிடம் எடுத்துச் செல்லப்பட்டபோது, நோய்கள் குணமாகின; தீய ஆவிகள் அவர்களை விட்டு வெளியேறின (அப். 19:11-12).

அக்காலத்தில் மந்திரவாதிகளின் மூலம் சீஷர்கள் அறிந்திருந்தச் செயல்களிலிருந்து இந்த அற்புதங்கள் முற்றிலும் வேறுபட்டவையாக இருந்தன. யூதர்களின் பேயோட்டிகளின் செயல்களிலிருந்தும் அவை முற்றிலும் மாறுபட்டிருந்தன. இதனால் மந்திரவாதத்திற்கும், சூனியத்திற்கும் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. சுமார் 50,000 வெள்ளிக்காசுகள் மதிப்புள்ள மந்திரச் சுருள்கள் பொதுமக்கள் முன்னிலையில் எரிக்கப்பட்டன (ஒரு வெள்ளிக்காசு என்பது சுமார் ஒரு நாள் கூலிக்குச் சமமான மதிப்புடையது) (அப். 19:13-20). இவ்வாறு கர்த்தருடைய வார்த்தை வல்லமையுடன் வளர்ந்தது; பெருந்தொகையான மக்கள் தங்களுடைய விக்கிரக ஆராதனை நம்பிக்கைகளைக் கைவிட்டனர் (அப். 19:26).

**நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?**

எபேசுவில் நாம் ஒரு சிறிய இந்தியாவையேக் காண முடிகிறது. இந்தியாவில் சமாதானத்தையும், செழிப்பையும் தேடி, விக்கிரக ஆராதனை முறைகளை மிகுந்த வைராக்கியத்துடன் பின்பற்றும் மக்கள் ஏராளமாக உள்ளனர். பல பழங்குடி சமூகங்கள் பாரம்பரிய ஆன்மீகவாத நம்பிக்கைகளால் கட்டுண்டு, மந்திரவாதிகளின் கைகளில் சொல்ல முடியாத அளவிலான துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அதே சமயம், “இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள்” என்று அழைக்கப்படுகிறவர்களில், முற்றிலும் சுயநலமாக வாழ்பவர்களையும், தேவபக்தியின் வேடத்தை உடையவர்களாக இருந்தாலும் அதன் வல்லமையை மறுதலிப்பவர்களையும் காண்கிறோம் (2 தீமோ. 3:1-5). இந்தப் பெருந்திரளான மக்களை வீணான நம்பிக்கைகளின் ஆழத்திலிருந்தும், துன்பங்களிலிருந்தும் எவ்வாறு மீட்பது?

எபேசுவில் அசாதாரணமான வல்லமையுடனும், ஞானத்துடனும் செயல்பட்ட அதே தேவன் மீண்டும் தமது செயலைச் செய்ய வேண்டும். பவுலிடம் இருந்த அதே வைராக்கியமும், விடாமுயற்சியும் கொண்ட மக்கள் நமக்குத் தேவை. பாரம்பரிய திருச்சபைகளும், மிஷனெரிகளால் நிறுவப்பட்ட திருச்சபைகளும் பவுலைப் போல பயனுள்ள அனைத்தையும் போதித்து, சீஷர்களை உருவாக்குவதற்குத் தங்களுடைய நேரத்தையும், ஆற்றலையும் அர்ப்பணிக்க வேண்டும். சிறிய குழுக்களில், உள்ளூர் மூப்பர்களின் தலைமையில் இதைச் செயல்படுத்துவதே முக்கியமானதாகும். இதன் மூலம் விசுவாசிகள் புதிய சபைகளை உருவாக்குதல், மூப்பர்களை நியமித்தல், சீஷர்களை உருவாக்குதல் ஆகியப் பணிகளைத் தொடர்ந்து பிறரிடமும் பெருக்கிக் கொண்டுசெல்லத் தொடங்குவார்கள்.

**நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள இடத்திலும், சூழ்நிலையிலும் தேவனுடையப் பணிக்காக இடைவிடாமல் ஜெபிக்கவும், சீஷர்களை உருவாக்கும் கடினமானப் பணியில் ஈடுபடவும் உங்களை அர்ப்பணிப்பீர்களா? தேவன் வல்லமையான திருச்சபை நாட்டும் இயக்கங்களை உருவாக்க முடியும். அவை நம்முடைய சக இந்தியர்களில் கோடிக்கணக்கான மக்களைச் சென்றடையும்.**

-4ஆம் பக்கத் தொடர்ச்சி

அழைக்கப்படும் இப்பகுதியைப் புகழ்பெற்ற தொல்லியல் வல்லுநர் ஜோசபஸ் “பூலோக சொர்க்கம்” என்றும் “இயற்கையின் லட்சியம்” என்றும் வர்ணிக்கிறார். இப்பகுதியானது வெவ்வேறு காலநிலைகளில் வளருகின்ற மாறுபட்ட வகை மரங்கள் கூட இணக்கமாக, ஒன்றாக செழிக்க கட்டாயப்படுத்தியது என்றும் ஒரு “வற்றாத வசந்தம்” ஆட்சி செய்யும் பகுதியாகவும் இருந்தது என்றும் வர்ணிக்கிறார்.

**முடிவு:**

புறஜாதியாரின் கலிலேயா (மத். 4:14) என்று அழைக்கப்பட்ட செபுலோன் மற்றும் நப்தலி பகுதிகளில் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறும் விதமாக இயேசுவின் பிரதானமான ஊழியம் விளங்கியது. இடுக்கமாய் ஈனப்படுத்தப்பட்ட இப்பகுதிகள் இயேசுவின் ஊழியத்தால் கனப்படுத்தப்பட்டது (யோவான் 7:52). இயேசுவின் சீடர்களில் யூதாசைத் தவிர மற்ற 11 பேரும் இந்த கலிலேயப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது சிறப்பானது. இருளின் பிடியிலிருந்து இயேசுவின் நற்செய்தியால் விடுவிக்கப்பட்ட சீஷர்கள் பெண்மான்களைப் போல துள்ளித்திரிந்து உலகமெங்கும் புறப்பட்டுபோய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். சுவிசேஷம் அறிவிப்பதே இன்பம் என்று உணர்ந்த அவர்கள் மரணத்திற்கும் துணிந்து நின்றார்கள் (நப்தலி கோத்திரத்தாரைப் போல (நியா. 5:18).

பிரியமான வாலிபர்களே! இயேசுவின் நற்செய்தி என்னும் தோட்டத்தில்,இரட்சிப்பு(பூ)என்பதுஅனைவருக்கும்இலவசமானது. அங்கே நாட்டு ஒலிவ மரங்கள் (யூதர்கள்) மட்டுமல்ல; காட்டு ஒலிவ மரங்களும் (புறஜாதிகள்) செழித்து வளருவார்கள். உயர்ந்த காதேஸ் பட்டணத்தில் (பரிசுத்தம் அல்லது பிரித்தெடுத்தல்) அவர்களுக்கும் அடைக்கலம் உண்டு. அடிமைத்தனத்திலிருந்து தப்பித்து, மகிழ்ச்சியாய் துள்ளிக்குதிக்கும் பெண்மான் உருவகம் தங்களை விடுவித்த இயேசுவின் நற்செய்தியில் மகிழும் இன்பமான கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாக்கப்பட்டுள்ளது.

**‘‘விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு,**
**நித்தியஜீவனைப் பற்றிக்கொள்;**
**அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்;**
**அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல**
**அறிக்கைபண்ணினவனுமாயிருக்கிறாய்.**
**(1 தீமோத்தேயு 6:12)**




## சாரா டக்கர் கல்லூரி ஜெபக்குழு

*திருநெல்வேலி*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கேரீத் நண்பர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்!

திருநெல்வேலி சாரா டக்கர் கல்லூரியிலுள்ள வாலிபர் ஜெபக்குழு, திருமதி. வசந்தி இம்மானுவேல் அவர்கள் திருநெல்வேலியில் மிஷனெரியாகப் பணியாற்றிய காலகட்டத்தில் தொடங்கப்பட்டது. மாணவிகள் ஒன்று கூடி ஐக்கியம், ஜெபம் மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வதற்கு பயனுள்ள ஒரு இடமாக இந்த ஜெபக்குழு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாதமும் முதல் வியாழக்கிழமையன்று சாரா டக்கர் கல்லூரி தேவாலயத்தில் இக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் விடுதியில் தங்கியுள்ள சுமார் 20 முதல் 30 மாணவிகள் தொடர்ந்து கலந்து கொள்கின்றனர்.

கூட்டம் ஆரம்ப ஜெபத்துடன் தொடங்குகிறது. அதனைத் தொடர்ந்து FMPB பாடல் புத்தகத்திலிருந்து இரண்டு அல்லது மூன்று பாடல்களும், ஒரு கீர்த்தனையும் பாடப்படுகின்றன. பின்னர் வேதாகம வாசிப்பு, மிஷனெரிகளின் பணித்தளங்களைக் குறித்த பகிர்வு, ஜெபம் மற்றும் சாட்சிப்பகிர்வு ஆகியவை நடைபெறுகின்றன. மேலும், மாணவிகளின் விசுவாசத்தை ஊக்கப்படுத்தி, பலப்படுத்தும் வகையில் ஒரு சிறிய செய்தி அல்லது சிந்தனையும் கொடுக்கப்படுகிறது. இறுதியாக, நிறைவு ஜெபத்துடன் கூட்டம் முடிவடைகிறது.

ஜெபக்குழு ஊழியத்தின் ஒரு பகுதியாக, கேரீத் (Kerith) இதழின் ஜெபக்குறிப்புகளும் மாணவிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் அவற்றை வாசித்து, சிந்தித்து, மிஷனெரிகளின் தேவைகளுக்காகவும், அவர்களின் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் இந்தக் கூட்டங்களின் மூலம், மாணவிகளிடையே ஜெப வாஞ்சையை வளர்த்தல், மிஷனெரி பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தேவனுக்கு ஊழியம் செய்வதில் ஆழமான அர்ப்பணிப்பை உருவாக்குதல் ஆகியவற்றை ஜெபக்குழு நோக்கமாகக் கொண்டுள்ளது.

கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

# வாலிபர் பிரிவு ஊழியத்தின் ஆசீர்வாதங்கள்



அருமனை வாலிபர் கூடுகை



வாலிபர் முகாமிற்கான ஆயத்த ஜெபம் - பெரியமலை



வாலிபர் & இளம் வாலிபர் கூடுகை - தண்டையார்பேட்டை



வாலிபர் கூடுகை - ரெட்ஹில்ஸ்



இளம் தம்பதியர் கூடுகை - திருநின்றவூர்



வாலிபர் கூடுகை - கூளைமேடு



வாலிபர் & இளம் வாலிபர் கூடுகை - திருவண்ணாமலை

MRS. VASANTHI EMMANUEL

# சரியான நபராக மாறுவது எப்படி?

BECOMING A RIGHT PERSON

HANDLE WITH CARE

## RIGHT FOUNDATION

BUILD ON THE

இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று, **“சரியான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது தான்”.**

எனக்காக தேவன் தேர்ந்தெடுத்தவர் யார்?

சரியான நபர் இவர்தான் என்பதை நான் எப்படி அறிந்து கொள்வது?

எனக்கு எப்போது திருமணம் நடக்கும்?

போன்ற கேள்விகள் அநேக இளைஞர்களின் மனதில் அடிக்கடி எழுகின்றன. இந்த கேள்விகள் முக்கியமானவையே. ஆனால் இவைகளை விட முக்கியமானது, “நான் சரியான வாழ்க்கைத் துணையாக மாறிக் கொண்டிருக்கிறேனா?

பலர் தங்களுக்கான சிறந்த வாழ்க்கைத் துணையைத் தேடுவதற்காக பல ஆண்டுகளைச் செலவிடுகிறார்கள். ஆனால், தேவபக்தியுள்ள கணவனாகவோ அல்லது மனைவியாகவோ மாறுவதற்குத் தங்களைத் தயார்ப்படுத்துவதில் மிகக் குறைந்த நேரமே செலவிடுகிறார்கள்.

வேதத்தில் ரூத்தின் வாழ்க்கை நமக்கு ஓர் ஆழமான பாடத்தைக் கற்றுக்கொடுக்கிறது. ரூத்தின் நிச்சயமற்ற நிலை மற்றும் அறியப்படாத எதிர்காலத்தைக் கொண்டிருந்த பெண் அவள். தன் சொந்த மக்களிடம் திரும்பிச் சென்று தன் வாழ்க்கையைப் பற்றிய சுயநலமான முடிவை எடுக்காமல் விசுவாசம், தியாகம் மற்றும் அர்ப்பணிப்பு நிறைந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தாள்.

நகோமியிடம்... **“நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.”** (ரூத் 1:16).

வாழ்க்கைக் கடினமானதாக மாறிய போதும், எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை அறியாத போதும் தேவனை நம்பினாள். பெத்லகேமுக்கு வந்த பிறகும் ரூத் தன் நாட்களை எப்பொழுது திருமணம் நடக்கும் என்ற கவலையோடு கழிக்கவில்லை. தன் எதிர்காலத்தைத் தேவனுடைய கரங்களில் ஒப்படைத்தாள்.

**ரூத்தின் வாழ்க்கை அவளின் கவர்ச்சியினால் அல்ல; குணத்தால் அறியப்பட்டாள்.**

தேவபக்தியுள்ள வாழ்க்கைத் துணையைத் தேடும் என் இளைய சமுதாயமே! சரியான நபரை தேடுவது மட்டுமல்ல; சரியான நபராக மாறுவதும் முக்கியம். திருமணத்திற்குக் காத்திருக்கும் காலம் வீணான காலம் அல்ல... அது குணத்தை வளர்த்துக் கொள்ளும் காலம். விசுவாசத்தில் வளரும் காலம். பொறுப்பைக் கற்றுக்கொள்ளும் காலம். தேவனுடைய சித்தத்திற்கு நம்மை தயார்ப்படுத்திக் கொள்ளும் காலம்.

**தேவபக்தியான குணநலனே அதன் வலிமையான அடித்தளம்.**

**போவாஸ் தன் மனைவிக்காக மட்டும் காத்திருந்த மனிதன் அல்ல; அவர் நேர்மை, தாராள மனம் மற்றும் தேவ பக்தி கொண்ட மனிதராக அறியப்பட்டிருந்தார்.**

தேவன் ரூத்தையும், போவாஸையும் இணைப்பதற்கு முன்பாக அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். ரூத் சரித்திரத்தில் ரூத்தும், போவாஸூம் தங்கள் எதிர்கால துணையைத் தேடியதை விட, தேவனுக்கு உண்மையாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். எனவே தேவன் இருவரையும் சரியான நேரத்தில் இணைத்தார்.

**பிரியமான என் இளம் சமுதாயமே!**

தேவனுடைய வழிநடத்துதலுக்காக உங்கள் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அவரிடம் ஒப்படையுங்கள். ஆனால் உங்கள் நிகழ்காலத்தை வீணாக்காதீர்கள். உங்கள் திருமணம் எப்போது? யார் உங்கள் வாழ்க்கைக்குள் வருவார்? இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் அது தேவனுக்குத் தெரியும்.

இன்றைய நாளை உண்மையுடன் வாழுங்கள்.

**சிந்திக்க:**

- நான் கிறிஸ்துவிடம் இன்னும் நெருங்கி வளர்கிறேனா?
- நான் நேர்மையும், உண்மையும் கொண்ட நபராக வளர்கிறேனா?
- நான் ஒரு தேவ பக்தியுள்ள வாழ்க்கைத் துணையாக இருப்பேனா?
- என்னுடைய எதிர்கால வாழ்க்கைத் துணையிடம் நான் எதிர்பார்க்கும் குணங்களை என் வாழ்க்கையில் வளர்த்துக் கொள்கிறேனா?

சற்று யோசித்துப் பாருங்கள்!

**உங்கள் எதிர்காலத்தைத் தேவனிடம் நம்பிக்கையோடு ஒப்படையுங்கள். தேவன் ஒளிமயமான எதிர்காலத்தை உங்களுக்குத் தருவார்.**

# தாலந்துகளின் உவமை

REV. K. KINGSLEY JOHN

4th WEEK MESSAGE - GOSPEL - ராஜ்ய களம்

## முன்னுரை:

இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பல உவமைகளின் மூலம் போதித்தார். மத்தேயு 25:14–30இல் கூறப்படும் தாலந்துகளின் உவமை, தேவன் நமக்குக் கொடுத்த வரங்களையும், பொறுப்புகளையும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை விளக்குகிறது.

ஒரு மனிதன் தூரதேசத்திற்கு புறப்படும்போது, தனது ஊழியக்காரர்களிடம் தன் சொத்துக்களை ஒப்படைத்தான். ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், மற்றொருவனுக்கு இரண்டு தாலந்தும், இன்னொருவனுக்கு ஒரு தாலந்தும் கொடுத்தான். அவன் திரும்பி வந்தபோது, ஒவ்வொருவரிடமும் தான் கொடுத்த தாலந்தைப் பற்றி கணக்குக் கேட்டான். இந்த உவமை நம்மை ஒரு முக்கியமான கேள்விக்கு அழைக்கிறது: தேவன் நமக்குக் கொடுத்தத் தாலந்துகளை அவருடைய ராஜ்யத்திற்காக எவ்வாறு பயன்படுத்துகிறோம்?

## 1. ராஜ்ய களம் – தேவன் கொடுத்த தாலந்துகளின் களம்:

ஒரு மனிதன் தனது ஊழியக்காரர்களுக்கு அவரவர் திறமைக்குத் தக்கதாக தாலந்துகளைக் கொடுத்தான். அனைவருக்கும் ஒரே அளவு கொடுக்கப்படவில்லை. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒன்று ஒப்படைக்கப்பட்டது. அதுபோல தேவன் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வரங்களையும், திறமைகளையும் கொடுத்திருக்கிறார்.

ஒருவருக்குப் போதிக்கும் திறமை, பாடும் திறமை, ஜெபிக்கும் வரம், தலைமைத்துவ திறமை, பிறருக்கு உதவும் மனம், சுவிசேஷம் அறிவிக்கும் திறமை போன்றவற்றைக் கொடுத்திருக்கிறார். தேவன் கொடுத்த தாலந்துகள் நம்முடைய பெருமைக்காக அல்ல; அவருடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக. தேவன் கொடுத்த தாலந்துகளை அறிந்துகொள்வது ராஜ்ய களத்தில் நமது முதல் பொறுப்பு.

## 2. ராஜ்ய களம் – தாலந்துகளைப் பெருக்க வேண்டிய களம்:

ஐந்து தாலந்துகளைப் பெற்றவன் அவற்றைக் கொண்டு வியாபாரம் செய்து மேலும் ஐந்து தாலந்துகளைச் சம்பாதித்தான். இரண்டு தாலந்துகளைப் பெற்றவனும், மேலும் இரண்டு தாலந்துகளைச் சம்பாதித்தான். இருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டதை உண்மையுடன் பயன்படுத்தினார்கள். ஆனால் ஒரு தாலந்தைப் பெற்றவனோ அதை நிலத்தில் புதைத்து வைத்தான். அவன் தன் எஜமானுக்காக எதையும் செய்யவில்லை.

இந்த உவமை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. தேவன் நமக்குக் கொடுத்த திறமைகள் பயன்படுத்தப்படும்போது வளர்ச்சி ஏற்படுகிறது. பயன்படுத்தாமல் விட்டுவிட்டால், அவை பயனற்றதாகிவிடும்.

## நடைமுறைப் பயன்பாடு:

சபையில் பாடும் வரம் இருந்தால் பாடுங்கள். போதிக்கும் வரமிருந்தால் தேவனுடைய வார்த்தையைப் பகிருங்கள். பிறருக்கு உதவும் திறமை இருந்தால் உதவுங்கள். சிறிய ஊழியமாக இருந்தாலும் உண்மையுடன் செய்யுங்கள். ராஜ்ய களத்தில் சிறிய தாலந்தும் பெரிய ஆசீர்வாதமாக மாறலாம். தாலந்தின் அளவு முக்கியமல்ல; அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம்.

## 3. ராஜ்ய களம் – கணக்குக் கொடுக்க வேண்டிய களம்:

எஜமான் திரும்பி வந்தபோது, ஊழியக்காரர்களிடம் கணக்குக் கேட்டான். ஐந்து தாலந்துகளைப் பெற்றவனும், இரண்டு தாலந்துகளைப் பெற்றவனும் தங்கள் தாலந்துகளைப் பெருக்கியிருந்தார்கள்.

எஜமான் அவர்களைப் பாராட்டி "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று கூறினான் (மத். 25:21). ஆனால் ஒரு தாலந்தைப் பெற்றவன் பயத்தினால் அதை மறைத்து வைத்திருந்தான். அவன் தன் எஜமானிடம் கணக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இதன் மூலம் நம்முடைய வாழ்க்கையும், தேவனுக்கு முன்பாக பொறுப்புடையது என்பதை நாம் அறிகிறோம். தேவன் நமக்குக் கொடுத்த நேரம், திறமை, வாய்ப்பு, வளம் ஆகியவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதற்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டும். ராஜ்ய களத்தில் ஊழியம் செய்வது ஒரு வாய்ப்பு மட்டுமல்ல; அது தேவன் கொடுத்த பொறுப்பும் ஆகும்.

## முடிவுரை:

தாலந்துகளின் உவமை, தேவன் நமக்குக் கொடுத்த வரங்களை வீணாக்காமல், அவருடைய ராஜ்யத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்பதை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. இந்த உவமையின் மூலம் மூன்று முக்கிய உண்மைகளை நாம் கற்றுக்கொள்கிறோம்.

- தேவன் கொடுத்த தாலந்துகளை அறிந்து கொள்.
- தேவனுடைய ராஜ்யத்திற்காக அவற்றை பயன்படுத்திப் பெருக்கு.
- தேவனுக்கு முன்பாக உண்மையுடன் கணக்குக் கொடு.

ஐந்து தாலந்துகளைப் பெற்றவனுக்கும், இரண்டு தாலந்துகளைப் பெற்றவனுக்கும் பாராட்டு கிடைத்தது. இதிலிருந்து தேவன் நம்முடைய திறமையின் அளவை மட்டும் பார்க்கவில்லை; நாம் பெற்றதை எவ்வளவு உண்மையுடன் பயன்படுத்துகிறோம் என்பதையும் பார்க்கிறார் என்பதை இதன்மூலம் அறிகிறோம்.

## சிந்தனை:

*தேவன் எனக்குக் கொடுத்த தாலந்துகளை நான் பயன்படுத்துகிறேனா? அல்லது பயத்தினாலும், சோம்பேறித்தனத்தினாலும் அவற்றை மறைத்து வைத்திருக்கிறேனா?*



REV. ALBERT PRABHAKARAN

# கனம் பெற்ற அவருடைய பரிசுத்தவான்கள்

தாழ்மையில் மலர்ந்திடும் பரலோக *மேன்மை!*
தேவ சித்தத்தில் நிலைநிற்கும் மகிமையின் *வாய்மை!*
மண்ணகக் கறைதீண்டா வைரப் பனித்துளியின் *தூய்மை!*
மண்டிய புயலிலும் திரியணையாத விசுவாசத் *திண்மை!*

பிரதிபலன் பாராத அர்ப்பணிப்பின் *உண்மை!*
பிரிதொன்றை நாடாத தன்னலமற்ற *நேர்மை!*
சுயத்தினை உடைத்தெழும் தியாகத்தின் *வளமை!*
சுடர்விடும் சேனைகளின் தேவனின் *மகிமை!*

மரணத்தை ருசியாமல் வான்சென்ற ஏனோக்கின் *முழுமை!*
மாதேவனின் நண்பனாய் நற்பேறு பெற்ற ஆபிரகாமின் *பற்றுடைமை!*
கர்த்தரை நேராய்க் கண்ட நல் தீர்க்கன் மோசேயின் *செம்மை!*
காலம் போற்றும் நல் ஊழியன் சாமுவேலின் *கடமை!*

இறைவனின் நெஞ்சிலே இருப்பிடம் கொண்ட தாவீதின் *தகைமை!*
விண்ணவர் வியக்கும் விழுப்பம் கொண்ட தானியேலின் *அருமை!*
மண்ணவர் போற்றும் மாண்பினைப் பெற்ற மரியாளின் *தாழ்மை!*
பிறந்தோரில் சிறந்தோனாய் நற்பேறு பெற்ற யோவான் ஸ்நானகனின் *கூர்மை!*

மீனவன் பேதுரு மேய்ப்பனாய் மாறிய அதிசயத் *தலைமை!*
நீதியின் கிரீடம் போராடி வென்ற பவுலின் *பொறுமை!*
விண்ணகக் காட்சியைக் கண்ட ஸ்தேவானின் *பெருமை!*
அன்பின் மார்பில் சாய்ந்து அருள்மொழி கேட்ட யோவானின் *மென்மை!*

பூமியின் மாயையை உதறித் தள்ளிடும் உன்னதத் *தியாகவுடைமை!*
புண்ணியப் பரலோகப் பொக்கிஷம் நாடிடும் அழியாப் *பொன்னகமை!*
பரிசுத்தப் பாதையில் ஜீவனும் ஈந்திடும் விசுவாச *அருளுடைமை!*
பரமனின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் வீழ்ந்திடும் மெய்ப் *பணிவுடைமை!*

இருபுறக் கருக்குள்ள இறைவாக்கின் வாளினை ஏந்திடும் *தீரமை!*
இருளின் பாவத்தை வேரறுக்க எழும்பிடும் ஆவியின் *திடமுடைமை!*
முடிவுபரியந்தம் கறையின்றி வாழ்ந்து வென்றிடும் *பேருடைமை!*
முழுமுதல் கிறிஸ்துவோடு ஆளுகை செய்திடும் சத்தியச் *சீருடைமை!*

ஆண்டவன் சித்தம் ஒன்றே வாழ்வென இயம்புகின்ற *ஒப்புடைமை!*
குயவனின் கைகளில் மண்பாண்டமாய் உருப்பெறும் *நேருடைமை!*
மண்ணகக் கறையறுத்துப் பரிசுத்தப் பாத்திரமாய் மிளிரும் *வல்லமை!*
உன்னதக் கிறிஸ்துவுக்காய் உயிரையும் ஈந்து வென்றிடும் *நிறைவுடைமை!*

# இயேசுகிறிஸ்துவின் சீஷன்

# யூதா

யூதா இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர் ஆவார். ததேயு அல்லது யாக்கோபின் யூதா (Judas of James) என்றும் அழைக்கப்படும் யூதா, கிறிஸ்தவ வரலாற்றில் ஆரம்பகால திருச்சபையின் ஒரு முக்கியத் தூணாகவும், தளராத நம்பிக்கையின் உலகளாவிய அடையாளமாகவும் திகழ்கிறார். இவரது மற்ற பெயர்கள் யூதா ததேயு (Jude Thaddeus), யூதாஸ் ததேயு (Judas Thaddaeus), லெபேயு (Lebbaeus) அல்லது யாக்கோபின் யூதா என்பதாகும்.

புதிய ஏற்பாடு இயேசுவைக் காட்டிக்கொடுத்த 'யூதாஸ் காரியோத்து' என்னும் மற்றொரு சீடனிலிருந்து இந்த யூதாவை வேறுபடுத்திக் காட்டுகிறது. பாரம்பரியமாகவும், வேதவசனங்களின்படியும் இவர் இயேசுவின் 'சகோதரர்களில்' ஒருவராகக் கருதப்படுகிறார் (பாரம்பரியமாக இவர் இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரராக அல்லது மாற்றாந்தாய் சகோதரராகப் பார்க்கப்படுகிறார்). மேலும் இவர் சின்ன யாக்கோபின் சகோதரர் ஆவார்.

இயேசுவுடனான இந்த நெருங்கிய உறவு, இயேசுவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த நிகழ்வு ஆகியவற்றுக்கு யூதாவை நேரடியாகக் கண் கண்ட சாட்சியாக மாற்றியது. மத்தேயு 13:55இல் இயேசுவின் சகோதரர்களில் ஒருவராக யூதா குறிப்பிடப்பட்டுள்ளார்.

## இயேசு கிறிஸ்துவின் சீடரான யூதாவின் ஊழியப் பணி (The Mission of Jude):

யூதாவின் வாழ்க்கை, இயேசுவின் நேரடி ஊழியத்தையும், ஆரம்பகால கிறிஸ்தவத்தின் விரைவான, தைரியமான வளர்ச்சியையும் இணைக்கும் பாலமாக இருந்தது. யூதா, சமாரியா, மெசபடோமியா மற்றும் பெர்சியா போன்ற பகுதிகளில் யூதா தனது ஊழியத்தைச் செய்தார் என்று பாரம்பரியப் பதிவுகள் கூறுகின்றன.

வேதாகமத்தில் (பைபிள்) புதிய ஏற்பாட்டின் குறுகிய நிருபமான 'யூதா எழுதிய நிருபத்தை' எழுதியதற்காகவும், போலி போதகர்களுக்கு எதிராகத் தங்கள் விசுவாசத்தைப் பலமாகப் பாதுகாக்குமாறு ஆரம்பகால கிறிஸ்தவர்களை எச்சரித்ததற்காகவும் யூதா முக்கியமாக அறியப்படுகிறார். இந்த நிருபத்தை யூதா, உட்பகையையும், ஆன்மீகச் சீரழிவையும் எதிர்கொள்ளும் ஒரு சமூகத்திற்கு எழுதுகிறார். விசுவாசிகள் 'விசுவாசத்திற்காகப் போராட வேண்டும்' என்று மிகுந்த அவசியத்துடன் கேட்டுக்கொள்வதோடு, சீர்கெட்ட தலைவர்களின் ஒழுக்கக்கேடான செயல்களுக்கு எதிராக அவர்களை எச்சரிக்கிறார்.

மற்ற சீடர்களைப் போலவே, யூதாவின் முதன்மையான அழைப்பும், இயேசுவுக்கு நம்பகமான நண்பராக 'அவருடன் கூடவே இருப்பது', அவருடன் பயணம் செய்வது, உணவருந்துவது மற்றும் வாழ்வதுதான் (மாற்கு 3:14). மத்தேயு 10:1-4இன் படி, தனது நற்செய்திப் பயணங்களின் போது அசுத்த ஆவிகளைத் துரத்துவதிலும் 'சகலவித வியாதிகளையும், நோய்களையும்' குணப்படுத்துவதிலும் யூதா தீவிரமாகப் பங்கெடுத்தார்.

## இயேசு கிறிஸ்துவின் சீடரான யூதாவின் தியாக மரணம் (The Martyrdom of Jude):

கி.பி. 65இல் பெர்சியாவில் தனது விசுவாசத்திற்காக இவர் இரத்தசாட்சியாக மரித்தார் என்று நம்பப்படுகிறது. தனது சக அப்போஸ்தலரான புனித சீமோனுடன் சேர்ந்து, யூதா தடியால் அடித்துக் கொல்லப்பட்டு, பின்னர் அகலமான கோடரியால் தலை துண்டிக்கப்பட்டார் என்பதே மிகவும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரியக் கூற்றாகும். இதன் காரணமாகவே, கிறிஸ்தவக் கலைகளில் புனித யூதா தனது தியாகத்தின் அடையாளமாகத் தடி அல்லது கோடரியை ஏந்தியிருப்பது போல் எப்போதும் சித்தரிக்கப்படுகிறார்.

## இயேசு கிறிஸ்துவின் சீடரான யூதாவின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்:

இயேசுகிறிஸ்துவோடு சேர்ந்து ஊழியம் செய்த ஒரு எளிய மற்றும் அமைதியான தன்மையுடையவர். தனது ஊழியத்தின் மூலம் தனது பெயர் யாரையும் விட உயர்ந்து நிற்க வேண்டும் என்று அவர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரையிலும் அவருடன் நிலைத்து நின்று தனது தனி பண்புகளை வெளிப்படுத்தினார். புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்கு இன்றளவும் அவர் அளித்த பங்களிப்பு 'யூதாவின் நிருபம்' ஆகும். அதிலுள்ள உண்மைகளும் பாடங்களும் இன்றளவும் ஒட்டுமொத்தத் திருச்சபைகளுக்கும் பொருந்தக்கூடியவையாக உள்ளன.

## இயேசு கிறிஸ்துவின் சீடரான யூதாவின் வாழ்வு மற்றும் ஊழியத்தின் மூலம் FMPB எதிர்பார்ப்பது என்ன?

கடவுளின் ஊழியத்தில் தரிசனமும், இலட்சியமும் கொண்ட ஊழியர்களை இந்த இயக்கம் எதிர்நோக்குகிறது. இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியோடு நாட்டின் பல இடங்களை (கிராமங்கள், நகரங்கள் மற்றும் பிராந்தியங்கள்) சென்றடையக்கூடிய ஒரு நபர்; சக ஊழியர்களுடனும், கிறிஸ்தவ ஊழியர் குழுவுடனும் இணைந்து பயணம் செய்து ஊழியம் செய்யக்கூடிய ஒரு நபராக (சீமோனுடன் யூதா செய்தது போல); கடவுளின் ராஜ்யத்திற்காக வாழ அல்லது சாகத் தயாராக இருக்கும் ஒரு நபராகத் தேவை.

அன்பான நண்பர்களே, கடவுளின் ஊழியத்திற்காக இந்த இயக்கம் இளைஞர்களையும் இளம்பெண்களையும் (Gen Z) எதிர்நோக்குகிறது. வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள், மருத்துவர்கள், கலாச்சாரங்களைக் கடந்து ஊழியம் செய்யும் மிஷனெரிகள், நமது பத்திரிகைகளுக்கான எழுத்தாளர்கள் மற்றும் மிஷன் களங்களில் உள்ள விடுதிகளின் காப்பாளர்களாகப் பணியாற்ற இளைஞர்களுக்கான கதவுகள் அகலத் திறந்துள்ளன.

**சவால்கள் (The challenges):** உங்களின் பதில் என்ன? எங்கள் ஊழியத்திற்காக ஜெபிக்கிறீர்களா? எங்களோடு இணைய விரும்புகிறீர்களா? நாட்டின் நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களுக்கு சென்று நற்செய்தியை அறிவிக்கும் இளைஞர்களுக்காகக் காத்திருக்கிறோம். சிந்தியுங்கள்!



குருதிக் களம் – REV. PRABAKARA SARATHY


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
விருதுநகர் மாவட்டம்
வாலிபர் கூடுகை 2026
பேர் சொல்லி அழைப்பவர்
ஏசாயா 43:1
QARA
என்று?
2 2026 அக்டோபர் 9 AM - 4 PM
வெள்ளிக்கிழமை
(அரசு விடுமுறை நாள்)
எங்கே?
YMCA வளாகம்
விருதுநகர்
TELC ஜுப்லி ஆலயத்தின் பின்புறம்
சிறப்பு செய்தி
Rev.I. தர்மதுரை M.Com., M.Phil., B.D.,
இயக்குநர், TDYA
யாருக்கு?
18 முதல் 30 வயது வரையுள்ள வாலிபர்களுக்கு
• LOVELY SONGS • ENGAGING SESSIONS • INSPIRING MESSAGES
சபை பாகுபாடின்றி கலந்துக்கொள்ள வாலிபர்களை அன்புடன் அழைக்கிறோம்!
Scan for Location
தொடர்புக்கு: 90809 43267, 94450 70330


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
— வேலூர் மாவட்டம் —
வாலிபர் கூடுகை 2026
பதிவு ₹ 10/- மட்டும்
கருப்பொருள் :
விடுவித்துக் கொள்
சகரியா 2:7
நாள் : 02 அக்டோபர் 2026, வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 9.30 - மாலை 4.30
இடம் : CSI திரித்து நாதர் ஆலயம், காந்திநகர், வேலூர் -6
தலைமை :
அருட்திரு. ஜேரட் அருள் ஜெபகுமார்
செய்தி :
இம்மானுவேல் ரஞ்சித்சிங்
வசந்தி இம்மானுவேல்
சென்னை.
பணித்தளப் பகிர்வு :
பரணிதரன்
செல்வராணி
சிறப்பம்சங்கள்
வாலிபத்தம்பி தங்கைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அருட்திரு. R. எட்வின் செல்வராஜ், FMPB, வேலூர்
திரு. சாம்பால்,
திருமதி. ஏஞ்சலின் சுதாகர்,
82923 90481
93619 56997
95008 34776


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
கேளம்பாக்கம் பணி மாவட்டம் நடத்தும்
சிறப்பு வாலிபர்
மற்றும்
இளம் வாலிபர் கூடுகை
02-10-2026 (வெள்ளி)
காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை
ஐ.சி.எம் ஜெப வீடு, மலையப்ப முதலி தெரு,
Opp. Post Office, Near B.K.M.School, கேளம்பாக்கம் – 603103.
கருப்பொருள்
“யாரை நான் அனுப்புவேன்”
ஏசாயா 6:8
... செய்தியாளர்கள் ...
Rev. S.ஆண்ட்ரூஸ் ஜவஹர்
FMPB Teens Wing
Mrs. ஷீலா டேனியல்
FMPB Youth Wing
வயது வரம்பு 13 முதல் 30 வரை / மதிய உணவு உண்டு
பாரத தேசம் இயேசுவை அறிய திரளாக புறப்பட்டு வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.
ONLY for TEENS and YOUTH with AGE 13 to 30 years
தொடர்புக்கு... FMPB - 77082 73734


C.S.I. திருநெல்வேலி திருமண்டலமும்
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, தென்மண்டலமும்
இணைந்து வழங்கும்
மிஷன் எக்ஸ்போ
நெல்லை 2026
திருநெல்வேலி, தென் தமிழக திருச்சபையின் வரலாறு மற்றும் அருட்பணியாளர்களின் வாழ்க்கை சரித்திரத்தை சித்தரிக்கும்
மாபெரும் ஒலி ஒளி மிஷனெரி தரிசன கண்காட்சி
தலைமை
Rt. Rev. Dr. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்கள்,
பேராயர், சி. எஸ். ஐ. திருநெல்வேலி திருமண்டலம்
காட்சியை தொகுத்து வழங்குபவர்
திரு. V. நவநீதர், ஓவியர்
இடம்
C.S.I. திருமண்டல தரிசனபூமி,
டக்கரம்மாள்புரம், நெல்லை
நாள்
அக்டோபர், 2026
1 | 2 | 3 | 4 | 5
6 | 7 | 8 | 9
கருப்பொருள்:
பூர்வநாட்களை நினை
உபாகமம் 32:7
நேரம்
தினமும்
காலை 10:00 முதல்
மாலை 09:00 வரை
தினமும் மாலை 6:00 மணி
அனுமதி இலவசம்
ஒலி ஒளி நாடகம்


FRIENDS MISSIONARY PRAYER BAND
Presents
TWO HEARTS, One Covenant
...a cord of three strands is not quickly broken. Eccl. 4:12
YOUNG Couples RETREAT
Join us for a time of Renewal, Joy & Meeting in the presence of the Lord
2026 NOVEMBER
7 SAT
8 SUN
(GOVT. HOLIDAYS)
SAT 8 AM to SUN 4 PM
PLACE
IRAIVANIN THOTTAM, SENDRAYANPALAYAM, POONDI, THIRUVALLUR
SPEAKERS
REV. S. EMMANUEL RANJITSINGH, FMPB, CHENNAI
MRS. GAYATHRI VENKATESH, CHENNAI
REV. S. DANIEL THOMAS, FMPB, CHENNAI
MRS. VASANTHI EMMANUEL, FMPB
THE RETREAT WILL BEGIN WITH BREAKFAST FELLOWSHIP
Only for Couples with 0 to 10 years of Marriage
THE KIDS WILL BE WELL TAKEN CARE OF
Registration Fee • Per Family • Rs. 700
Register Here
Scan for Location
FOR DETAILS CONTACT: 94888 05454, 91768 68250, 90039 70412


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
தமிழ்நாடு மண்டலம் நடத்தும்
வாலிபர் மற்றும் இளம் வாலிபர் முகாம்
2026 அக்டோபர்
17 (சனி) மாலை 4.00 மணி முதல்
20 (செவ்வாய்) மதியம் 1.00 மணி வரை
இடம்
யேகோவாயீரே, பெரியமலை
செய்தியாளர்கள்
REV. இம்மானுவேல் ரஞ்சித்சிங், FMPB
MRS. வசந்தி இம்மானுவேல், FMPB
REV. R. தாமஸ், FMPB
REV. J. டேனியல் அருள்மணி, FMPB
REV. ஆன்ட்ரூஸ் ஜவகர், FMPB
EVA. மதியழகன், CHENNAI
மற்றும் பணித்தள மிஷனெரிகள்
| WORSHIP | FELLOWSHIP | GOD'S WORD |
| NEW BEGINNINGS | CAMP FIRE |
கருப்பொருள்:
ரீஜியா
சாதிக்கப் பிறந்தவர்கள்
(நியா. 6:12)
YOUTHS & TEENS... Come on Celebrate with Jesus
BORN TO REIGN
வயது: 13 முதல் 30 வரை
பதிவுக் கட்டணம் :100/-
ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே தங்கும் வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
வேதாகமம், போர்வை கொண்டு வரவும்.
Born to reign
COMPETITION
Date: 17th October மாலை 4 மணி முதல்
• குழுப்பாடல்கள் / Group Singing
நடனம் / Choreography
வேத வினா போட்டி / Bible Quiz
• சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்!
• அனைத்து திருச்சபை வாலிபர்களும் பங்குபெற அன்புடன் அழைக்கிறோம்.
முன்பதிவு செய்ய
தொடர்புக்கு: FMPB, 9741885571, 9424252295, 9942315036, 9442697289, 9442074732